# அரசு ஊழியர்

அக்டோபர் 2020

மலர் : 41 இதழ் : 10

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்

### இந்தி தெரியாது




பட்டினி கிடந்து
பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்திடினும்

கட்டி இழுத்து
கால்கை முறித்து
அங்கம் பிளந்து
இழந்து துடித்திடினும்

பொங்கு தமிழை
பேச மறப்பேனோ...?

– மகாகவி பாரதி



தலைவர் மடல்

# முடியாட்சியின் கொடிய சட்டங்களுக்கு முடிவு கட்டுவோம்!

## தூக்குக் கயிறு வேளாண் சட்டங்கள்

விவசாய விளை பொருட்கள் வர்த்தக மசோதா, விவசாயப் பொருட்கள் விலை உத்தரவாத மசோதா, அத்தியாவசியப் பொருட்கள் சட்டத் திருத்த மசோதா ஆகிய மூன்று மசோதாக்களை மத்தியில் ஆளும் மோடி அரசு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றியுள்ளது. இந்த சட்டங்கள் விவசாயிகளை வர்த்தக சூதாடிகளின் விளையாட்டுப் பொருட்களாக்கி விடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

## விதைப்பதும் விளைவிப்பதும் மட்டும் விவசாயி. இனி கதிர் அறுப்பவன் கார்ப்பரேட்

மத்திய அரசு கொண்டு வந்துள்ள, விவசாயம் தொடர்பான மூன்று சட்டங்களின் பெயர்களை படிக்கும்போது, இந்த சட்டங்கள் தாங்கள் விளைவித்த பொருட்களை விற்கமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு ஆதரவானது போலத் தோற்றம் கொடுக்கும். ஆனால் இவற்றை கூர்ந்து பார்த்தால்தான் தெரியும் இந்த சட்டங்கள் விவசாயிகளை வர்த்தகச் சூதாடிகள் கையில் ஒப்படைக்கும் சட்டங்கள் என்று.

இந்தச் சட்டங்களின் மூலம் விவசாயிகளின் சந்தைச் சுதந்திரம் பறிக்கப்படும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைப்பதற்கான எந்த உறுதிப்பாடும் இந்தச் சட்டங்களில் இல்லை. இந்தியா முழுவதிலும் இந்தச் சட்டங்களால் சிறு, குறு விவசாயிகள் தங்கள் பொருட்களை விற்க முடியாத நிலை ஏற்படும். வேண்டுமானால் அவர்கள் தங்களிடம் இருக்கும் துண்டுக்காணி நிலங்களை கார்ப்பரேட்டுகளிடம் விற்றுக்கொள்ளலாம் என்பது கள யதார்த்தமாக மாறிவிடும்.

இந்தப் பேரிடர் காலத்தில் இந்த மசோதாக்களை உடனடியாக கொண்டுவர வேண்டியத் தேவை பாஜக அரசுக்கு ஏன் எழுந்தது என்பதன் பின்னால் ஒளிந்திருக்கும் கார்ப்பரேட் அரசியலை நாம் புரிந்து கொள்ள முடியாமல் இல்லை. இந்த பேரிடர் காலத்தில் மசோதாக்களை எதிர்த்து யாரும் போராட முடியாது என்பதும் கேள்வி கேட்க முடியாது என்பதும்தான் இத்தனை அவசரத்திற்குக் காரணம்.

## எட்டு மணி நேர வேலை இனி இல்லை

மத்திய அரசை ஆளும் பாஜக, தொழிலாளர்கள், வர்த்தகர்கள், நடுத்தர வர்க்கத்தினர், சிறு குறு தொழில் செய்வோர், விவசாயிகள் என யாரையும் பேதம் பார்ப்பதில்லை. விவசாயச் சட்டங்களைப் போலவே தொழிலாளர் நலச் சட்டங்களைச் சுருக்கியும், திருத்தியும் மூன்று மசோதாக்களைத் தாக்கல் செய்து. எட்டு மணி நேர வேலை என்பது இனியில்லை எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் தொழிலாளர்களை கசக்கிப் பிழியலாம் என முதலாளிகளுக்கு ரத்தினக் கம்பளம் விரித்துள்ளது.

## ஆளும் கூடாரத்திலேயே விவசாய சட்டங்களுக்கு எதிர்ப்பு

இந்த வேளாண் சட்டத்தின் பின் விளைவுகளை புரிந்துகொண்டதால்தான் பாரதிய ஜனதா அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த பஞ்சாப் சிரோன்மணி அகாலிதள கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ஹர்சிம்ரத் கவுர் பாதல் தன்னுடைய பதவியை தூக்கி எறிந்திருக்கிறார். ''விவசாயிகளின் நலன்களுக்கு எதிரானது என்று கருதப்படும் ஒரு சட்டத்தை, விவசாயிகளின் கருத்தை அறியாமல் கொண்டு வராதீர்கள்'' என்று மத்திய அரசிடம் அவர் கேட்டுக்கொண்டதாகவும் ''ஆனால் மத்திய அரசு என்னுடைய கருத்தை கவனத்தில் கொள்ளவில்லை.'' என்பதால் அமைச்சர் பதவியைத் தூக்கியெறிந்து விட்டதாகக் ஊடகங்களுக்கு அவர் பேட்டியளித்துள்ளார்.

விளைவிக்கும் பொருட்களுக்கு குறைந்தபட்ச கொள் முதல் விலையை நிர்ணயிக்கக்கூட மத்திய அரசு முன்வரவில்லை. இது கார்ப்பரேட் முதலாளிகள் ஒன்றுகூடி விவசாயப் பொருட்களை அடிமாட்டு விலைக்கு பேரம்பேச வழி வகுத்துவிடும் என்று பல தரப்பினரும் மத்திய அரசுக்கு புத்தி சொன்ன பின்னரும் அதைக் காதுகொடுக்காத மோடி, நாடு முழுவதிலும் பாரதிய ஜனதா அரசுக்கு எதிராக எழுந்த கொந்தளிப்பைப் பார்த்து, விவசாயிகளின் விளை பொருட்களை தனியார் கொள்முதல் செய்வதற்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைக்க மத்தியஅரசு உத்தரவாதம் அளிக்கும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார். மோடியின் இந்த வாக்குறுதி, ஒவ்வொரு இந்தியரின் கணக்கிலும் ரூ.15 லட்சம் டெபாசிட் செய்வதாக ஏற்கெனவே அளித்த வாக்குறுதிக்கு ஒப்பானது என்று கூறுகிறார் முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம். இதைவிட ஒருபடி மேலே போய் கர்நாடகா முன்னாள் முதல்வர் சித்த ராமைய்யா மத்திய அரசு கொண்டு வந்திருப்பது மசோதாக்கள் அல்ல, இவை விவசாயிகளுக்கான மரண சாசனம் என்கிறார்.

## ஆளும் அதிமுக அரசின் நிலைப்பாடும், வெளிப்பாடும்

ஆனால் அதிமுகவின் தேனி மக்களவை உறுப்பினர் ஓபிஎஸ் ரவீந்திரநாத் மசோதாவை ஆதரித்து இரண்டு கைகளையும் தூக்கி ஆதரவு தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் இந்த சட்டங்கள் இந்திய விவசாயத்தை உச்சத்துக்கு கொண்டுபோய்விடும் என்று உணர்ச்சி பொங்க பேசியிருக்கிறார். மாநிலங்களவை அதிமுக உறுப்பினர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியமோ இது விவசாயிகளுக்கு எதிரானது என்று வீரமாக அரங்கில் முழங்கிவிட்டு கடைசியில் மசோதாவை ஆதரித்து வாக்களித்தார். கேட்டால் எதிர்த்துப் பேசுவது வேறு, ஆதரிப்பது என்பது வேறு என்று வித்தியாசமான விளக்கம் சொல்கிறார்.

இந்த லட்சணத்தில் தமிழக முதல்வர் இந்த சட்டங்களை ஆதரித்து அறிக்கை வாசித்ததோடு, நான் ஒரு விவசாயி, எனக்குத்தான் விவசாயத்தைப் பற்றித் தெரியும் என்று அன்றாடம் வயலில் இறங்கி வேலை செய்பவரைப் போல பேசியிருக்கிறார். பாஜகவின் தயவில் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கும் எடப்பாடியார் இதிலுள்ள ஆபத்துகள் தெரிந்தும், ஆதரித்திருப்பது விவசாயிகளுக்கு செய்திருக்கும் பச்சை துரோகமாகும்.

இந்த மூன்று சட்டங்களில் அத்தியாவசியப் பொருட்கள் பாதுகாப்புச் சட்டத்தை திருத்தியதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலில் இடம் பெற்றிருந்த உணவு, தானியங்கள், பருப்பு வகைகள்,





சமையல் எண்ணெய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவை நீக்கப்படும். இதனால் இந்தப்பொருட்களின் விலையை கட்டுப்படுத்தும் கடமையிலிருந்து மத்திய அரசு விலகிக் கொள்வதோடு இவற்றிற்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கும் பொறுப்பையும் கை கழுவுகிறது. பெட்ரோலுக்கு விலை நிர்ணயிப்பது போல் இந்த பொருட்களுக்கு இனி கார்ப்பரேட் தனியார்கள் விலை நிர்ணயிப்பார்கள். அதை அரசு கேட்க முடியாது. ஆன்லைன் வர்த்தகத்தால் விவசாயிகள் ஏற்கெனவே வஞ்சிக்கப்பட்டு வரும் நிலையில், இது அவர்களை வைத்து வர்த்தக சூதாடிகள் பகடை ஆட்டம் ஆட வழி செய்துள்ளது. விவசாயி தான் விளைவிக்கும் பொருட்களை நாட்டில் எங்கு வேண்டுமானாலும் சென்று தங்கள் விற்றுக்கொள்ள இச்சட்டம் வழிவகை செய்வதாக மார்தட்டுகிறது மத்திய அரசு. தஞ்சாவூரில் ஐந்து மூட்டை நெல் விளைத்த விவசாயி அதை கொண்டுபோய் குஜராத்தில் விற்று அம்பானியாகி விடலாம் அல்லது வடமாநிலத்தில் உருளைக்கிழங்கு விளைவித்தவர் நேரடியாக ஒட்டன்சத்திரம் சந்தையில் அதை விற்று ஒரே நாளில் அதானியாகி விடலாம் என்பதுதான் மத்திய அரசு நாக்கில் தேன் தடவி சொல்ல வருகிற செய்தி. தன்னுடைய விளைபொருட்களை பக்கத்து ஊர் சந்தைக்கே கொண்டு போக முடியாமல் உள்ள விவசாயி கார்ப்பரேட்டுகள் கேட்கும் அடிமாட்டு விலைக்கு அதை விற்க நேரிடும். மோடி கொண்டு வந்துள்ள இந்த வேளாண் சட்டங்கள் முழுக்க முழுக்க கார்ப்பரேட்டுகளுக்கானவையே தவிர விவசாயிகள் நலன்களுக்கானவை அல்ல என்பது மட்டும் திண்ணம்.

## நீட் எனும் ஆட்கொல்லி நோய்

நீட் தேர்வு, மருத்துவ கனவு கொண்டுள்ள மாணவர்களை பலி வாங்கும் ஆட்கொல்லி நோயாக மாறியுள்ள நிலையில் மத்திய மாநில அரசுகள் அதைப்பற்றிய வியாக்கியானங்களிலேயே தங்கள் பொறுப்புகளை கை கழுவி வருகின்றன. நீட் தேர்வை மாநில அரசு எதிர்ப்பது போன்றதொரு பாவனை காட்டப்பட்டு தேர்வுகள் முடிந்த பின்னர் அதை பற்றி மறந்து விடுவது தமிழக அரசின் வாடிக்கையாகிவிட்டது. இவ்வாண்டு நீட் தேர்வு பயத்தில் நான்கு இளம் பிஞ்சுகள் தங்கள் இன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளது தமிழக மக்கள் மனதில் ஆழமான அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. இதுவரை 16 மாணவர்கள் தமிழகத்தில் தங்கள் உயிரை நீட் எனும் ஆட்கொல்லி நோய்க்காக தங்கள் உயிரை காவு கொடுத்துள்ளனர். இந்த ஆண்டு இறந்து போன 4 மாணவர்களும் தனியார் ஆங்கில வழிப் பள்ளிகளில்

பயின்றவர்கள் என்பதும் இவர்கள் தனிப்பயிற்சிக்கும் சென்று பயிற்சி எடுத்தவர்கள் என்பதும் இவர்களின் தற்கொலைகளில் புதைந்துள்ள மன இறுக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது. இவர்கள் யாரும் வறுமை நிலையில் இல்லை. பெற்றோர் அவர்களை பெரு விருப்பத் தோடு தயார் செய்திருக்கிறார்கள். நடுத்தர வர்க்கத்தின் எதிர்பார்ப்புகளுக்கு எடுத்துக்காட்டுகளாக அவர்கள் இருந்துள்ளார்கள். பெற்றோர்களின் விருப்பத்தினை தங்களால் நிறைவேற்ற முடியாது என்ற அச்சத்தில் தான் இவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். நீட் தேர்வு இந்த ஆண்டு இருக்குமா இருக்காதா என்ற திரிசங்கு சொர்க்கத்தில் மாணவர்களை தொடர்ந்து ஆண்டுதோறும் இந்த ஆட்சியாளர்கள் தவிக்கவிட்டு செய்யும் அரசியல் இன்னும் எத்தனை இளம்பிஞ்சுகளின் உயிரை வாங்குமோ தெரியவில்லை.



## சமூக நீதியும், இட ஒதுக்கீட்டு முறையும் இல்லாத புதிய கல்விக் கொள்கை

எல்லோருக்குமான சமவாய்ப்புள்ள கல்வி என்பது கிடைக்கவே கிடைக்காது என்பதை உணர்த்தும் தேசியக் கல்விக் கொள்கை 2020ஐ கல்வியாளர்களும் நடுநிலையாளர்களும் எதிர்த்து வரும் நிலையில் பிரதமர் மோடியோ, பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் இக்கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண் டுள்ளதாக கூறுவதோடு இலட்சியக் கனவுகளை அடையும் வழியாக இக்கல்விக் கொள்கை இருப்பதாக பிரகடனம் செய்கிறார். தேசிய கல்விக் கொள்கையை பொறுத்தவரை 3,5,8ஆம் வகுப்புகளுக்கு தேர்வு என்பது பெற்றோர்களை யும் மாணவர்களையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. கல்வி உரிமைச் சட்டம் குறித்தும் 'நான்-டிடென்ஷன்' பாலிசி குறித்தும் , இட ஒதுக்கீடு குறித்தும் இக்கல்விக் கொள்கையில் ஏதும் சொல்லப்படாதது தமிழகத்தின் சமூகநீதிக் கொள்கையை குழிதோண்டி புதைப்பதாக உள்ளது. தமிழகத்தில் 2010ல் நடைமுறைக்கு வந்த கல்வி உரிமைச்சட்டம் 6 முதல் 14 வயது வரை கட்டாயக் கல்வி தேர்ச்சி பற்றி கூறியது. 2012ல் முப்பருவ பாடத் தொடர்முறையும் அதோடு இணைந்த தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையும் அறிமுகப்படுத்தப் பட்டன. இதன் விளைவாக கடந்த 8 ஆண்டுகளாகவே தமிழகப் பள்ளிகளில் கல்வி இடைநிற்றல் இல்லாமல் குழந்தைகள் 8ஆம் வகுப்பு வரை தேக்கமில்லாமல் தங்கள் கல்வியைத் தொடர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் புதிய தேசியக் கல்விக்கொள்கை 3,5,8ஆம் வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு என்று வலியுறுத்துவதன் மூலம் கல்வி உரிமைச் சட்டத்தின் 'இடைநிற்றல் கூடாது' என்ற கொள்கை நீர்த்துப் போகிறது. 3,5,8 வகுப்புகளில் பொதுத் தேர்வுகள் என்பது குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் மன அழுத்தத்தை ஏற்படுத்தி விடக் கூடியவை. ஆனால் பிரதமர் மோடியோ இந்தப் புதிய கல்வி முறையின் நோக்கம் மாணவர்களை மதிப்பெண்களின் அழுத்தத்திலிருந்து விடுவிப்பதே என்கிறார்.

ஏற்கெனவே கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவரப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் மருத்துவ படிப்புக்கு மட்டுமல்லாமல் மற்ற எல்லா உயர்கல்வி படிப்புகளுக்கும் புதிதாக ஒரு நுழைவுத் தேர்வை சந்திக்க வேண்டும் என்று கூறும் இந்தக் கல்விக் கொள்கை 12 வருடங்கள் பள்ளியில் கற்ற கல்விக்கு அரசு தரும் அங்கீகாரத்தை கேள்விக்குறியாக்குகிறது. நுழைவுத் தேர்வை எழுதித்தான் கல்லூரிகளில் இடம் பெற முடியும் என்ற நிலை ஏற்பட்டால் பணம் படைத்தவர்கள் மற்றும் வசதியானவர்கள் வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே உயர்கல்வியை கற்கும் சூழ்நிலையை ஏற்படுத்தி விடும். இது தமிழகத்தில் கடைபிடிக்கப்பட்டு வரும் சமூக நீதிக் கொள்கையை குழிதோண்டி புதைக்கும் திட்டமாக புதியக் கல்விக் கொள்கை இருப்பதால்தான் நாம் அனைவரும் எதிர்த்தே தீரவேண்டிய நெருக்கடிக்கு ஆளாகியுள்ளோம்.

## தமிழகத்தின் தனித் தன்மை, காக்க வேண்டியது நம் கடமை

மத்திய அரசு வர்ணாசிரம தர்மத்தை நிலைநிறுத்த இந்தியா முழுமைக்கும் கொண்டு வரும் சட்டங்கள், மசோதாக்கள், இத்யாதிகள் பெரியாரும் அண்ணாவும் இன்னபிற பெருந்தலைவர்களும் தமிழகத்தில் தாங்கிப் பிடித்த சமூக நீதி மற்றும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை களுக்கு முட்டுக்கட்டை போட்டு முற்றாக ஒழித்துவிட முயற்சிப்பதை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

தமிழ்நாட்டின் மாண்பையும், இறையாண்மையையும், தமிழக மக்களின் உரிமைகளையும், அது எட்டியிருக்கும் பெருமைமிகு கல்விச் சாதனைகளையும், தமிழ் மொழியை யும், தமிழ் கலாச்சாரத்தையும் காக்கும் புனிதப் பொறுப்பு இந்த மண்ணில் வாழும் ஒவ்வொரு தமிழருக்கும் உண்டு. இதை நாம் இப்போதிலிருந்தே எதிர்க்காவிட்டால் தமிழ்ச்சாதி 200 ஆண்டுகளுக்கு பிந்தைய நிலைக்கு இழுக்கப்பட்டுவிடும் என்பதில் சிறு ஐயம் கூடத் தேவையில்லை.

ஆகவே தமிழக மக்களின் உரிமைகள், நலன்கள், சமூகநீதி கோட்பாடுகள், இட ஒதுக்கீட்டுக் கொள்கைகள், கலாச்சாரப் பெருமைகள் போன்றவற்றிற்கு எதிராக செயல்புரியும் மத்திய மோடி அரசையும் அதன் திட்டங் களையும் அரசு ஊழியர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எதிர்த்து அது குறித்து சாமானிய மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்தின் குரல்வளையை நெறித்து கேள்வி நேரத்தை நீக்கிவிட்டு உறுப்பினர்கள் கருத்தை மறுதலித்து பல்வேறு மசோதாக்களை மக்கள் நலனுக்கு எதிராக நிறைவேற்றிவரும் இந்த முடியாட்சியின் கொடிய சட்டங்களுக்கு முடிவு கட்ட ஒவ்வொரு அரசு ஊழியரும் உறுதி ஏற்போம். சாதி, மத, வர்க்க பேதமற்ற, பன்முகத் தன்மை வாய்ந்த இந்தியாவைக் காப்போம். ■

# இன்னொரு முறை நிகழ்த்திக் காட்டுவோம்! இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பதை!

உலகம் மிகவும் துன்பப்படுகிறது. கெட்ட மக்களின் வன்முறையால் அல்ல, நல்ல மக்கள் அமைதி காக்கும் காரணத்தால்.

தற்போது மத்திய, மாநில அரசியல் களத்திலும் நிர்வாகத்திலும் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது நெப்போலியன் போனபார்ட் சொன்ன இந்த மேற்கோள் தான் தவிர்க்க இயலாமல் நினைவில் வந்து நிற்கிறது.

## இந்தியா வளர்ச்சி வளர்ச்சி என்று பேசுகிறார் மோடி

பிரதமர் மோடி அவர்கள் எப்போது பேசினாலும், (ட்விட்டர்) தொட்டாலும் வளர்ச்சி வளர்ச்சி என்றே பேசுகிறார், எழுதுகிறார். ஆனால் அந்த வளர்ச்சி முன்னோக்கியதா அல்லது பின்னோக்கிய என்பதைப் பற்றி அவரும் அவரது ஆட்சியும் அவர்களை இயக்கும் ஆர்எஸ்எஸ் பரிவாரமும் சற்றும் யோசிப்பதில்லை.

ஊட்டச்சத்து குடும்பத்தின் நலத்தை காப்பதற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் நாட்டின் வளர்ச்சிக்கும் உதவும் என்று தனது கட்டுரையில் பிரதமர் குறிப்பிட்டு இருக்கிறார். அவர் குறிப்பிடுகிற வளர்ச்சி எத்தகையது என்பதை நாடும் நாட்டு மக்களும் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

இந்தியா பொருளாதாரத்தில் பின்னோக்கி வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் பிரதமருக்கு நெருக்கமான அம்பானியோ உலக பணக்காரர்களின் பட்டியலில் நான்காவது இடத்திற்கு முன்னேறி இருக்கிறார். இத்தகைய வளர்ச்சியைத்தான் பிரதமரும், அவரது ஆட்சியும் கட்சியும் முழங்கிக் கொண்டிருக்கின்றன. அவரது ஊட்டமும் நாட்டமும் மக்களுக்கல்லவே?

ஏழை எளிய மக்கள் பசி பட்டினியால் இந்த கொரோனா காலத்தில் மடிவதிலிருந்து காப்பாற்றுவதற்கு பிரதமர் சிறு அசைவு கூட ஏற்படுத்தவில்லை என்று பொருளாதார நிபுணர்கள் பலரும் மக்களின் கையில் பணத்தை கொடுத்தால் தான் அவர்களுக்கு உதவியாக இருக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் பயன்படும் என்று கூறியும் கூட சற்றும் பொருட்படுத்தாமல் இந்த மத்திய அரசு நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால் ஊட்டச்சத்து பற்றி மட்டுமின்றி வேறு எந்த நிகழ்வானாலும் வளர்ச்சி பற்றி பேசும் பிரதமர் அவர்கள், நாட்டின் தற்போதைய கொரோனா பாதிப்பிலும்கூட உலக அளவில் மூன்றாவது இடத்தில் இருந்து இரண்டாவது இடத்திற்கு வளர்ந்து விட்டதை பெருமையாக இனி பேசினாலும் பேசலாம் என்று பத்திரிகையில் எழுதுகிறார்கள். இத்தகைய மோசமான ஆட்சியை தான் இவரது ஆட்சி மக்களுக்கு பரிசளித்து கொண்டிருக்கிறது.

நமது நாட்டில் 5 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு 37.9%. ஆனால் இதர வளரும் நாடுகளின் சராசரியோ 25 சதவீதம். கர்ப்பிணி பெண்களில் 51.4 சதவீதம் ரத்தசோகை கொண்டவர்களாக உள்ளனர். நமது நாட்டின் ஊட்டச்சத்து அளவீடு மற்ற நாடுகளைப் போல் அல்லாமல் கார்போஹைட்ரேட் உணவு அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இந்த அளவீடு அடிப்படை பார்த்தாலும் கூட ஹைட்டி, வங்கதேசம் போன்ற நாடுகளைவிட இந்தியா பின்தங்கியுள்ளது. மோசமான பட்டினி நிலையில் உள்ள நாடுகளில் இந்தியா 67வது இடத்தில் உள்ளது. ஐந்து வயதுக்கும் கீழ் உள்ள குழந்தைகள் 44% போதிய ஊட்டச்சத்து இன்றியும் 72 சதவீதம் குழந்தைகள் ரத்த சோகையால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

இந்த நிலையில்தான் பிரதமர் மோடி ஊட்டச்சத்து பற்றிய மிக பிரமாதமாக முழங்கி வருகிறார். பேசுவது எழுதுவது என்பதெல்லாம் பிரமாதமாக தான் இருக்கிறது. ஆனால் நடவடிக்கையோ எந்த முன்னேற்றமும் இல்லையே. மத்திய அரசு வளர்ச்சி என்கிறது உதாரணம் 72% அரசுப் பள்ளிகளில் கழிவறைக்கு தண்ணீர் இல்லை. 75% சுகாதாரம் இல்லை. 30% மூடி கிடைக்கின்றன. - சிஏஜி அறிக்கை

## நாடாளுமன்றத்தை கேள்விக்குறியாக்கும்




இந்தியா ஒரு விவசாய நாடு அதை மறந்து மத்திய பிஜேபி அரசு வேளாண் விளை பொருள் வணிகக் குழு சட்டம் உத்திர

வாதம் மற்றும் வேளாண் ஒப்பந்த பாதுகாப்பு சட்டம், அத்தியா வசிய பொருட்கள் திருத்தச்சட்டம் 2020 ஆகிய மூன்று சட்டங்களை நாடாளுமன்ற மாநிலங்களவையில் நிறைவேற்றபட்ட விதம் ஜனநாயகத்தை மத்திய அரசு எந்த அளவுக்கு கேலிக்கூத்தாக உள்ளது என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது. 3 மசோதாக்கள் மீதும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூறியதை சற்றும் பொருட்படுத்தாமல் குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதாக்கள் நிறைவேறி விட்டதாக அறிவித்து இருப்பதன் மூலம் ஜனநாயகத்தின் குரல் நெறிக்கப்பட்டுள்ளது.

அவையில் ஒரு உறுப்பினர் வாக்கெடுப்பு கோரினால்கூட வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பது விதி. இடதுசாரி கட்சி உறுப்பினர்கள் உட்பட பல உறுப்பினர்கள் இம்மக்கள் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கோரிய போதும் அதைக் கவனத்தில் கொள்ளாமல் மசோதா நிறைவேறி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களவை துணைத் தலைவருக்கு எதிராக 12 எதிர்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற் கான நோட்டீஸ் அளித்துள்ளன. அவை நடவடிக்கை களையும் மசோதா நிறைவேற்றத்தையும் ஒத்தி வைக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரியும் ஏற்கப்பட வில்லை. மாநிலங்களவையில் இந்த மசோதாக்களை நிறைவேற்றுவதற்காக பெரும்பான்மை இல்லை என்று தெரிந்து மாநிலங்களவை தலைவர் வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளார். இது அரசமைப்பு சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்ட உறுப்பினர்களின் உரிமைகளை பாதிக்கும் செயலாகும்.

ஒரு அப்பட்டமான ஜனநாயக படுகொலையை நிகழ்த்திவிட்டு, நியாயத்திற்காக குரல் கொடுத்த இடதுசாரி கட்சி உள்ளிட்ட 8 எதிர்க்கட்சி உறுப்பினர் களை சஸ்பெண்ட் செய்துள்ளனர்.

கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவாக மத்திய அரசு கொண்டுவந்துள்ள 3 மசோதாக்களை எதிர்த்து நாடு முழுவதும் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தமிழகத்திலும் போராட்டம் அறிவிக்கப்பட்டு மிக எழுச்சியாக நடத்தப்பட்டது.

இந்த சட்டங்கள் குறித்து தமிழக முதலமைச்சர் அவர்கள் ராஜாவை விஞ்சிய ராஜ விசுவாசியாக சட்டம் குறித்து பிரதமர் தரப்பில் கூட தராத பல விஷயங்களை விரிவான அறிக்கையை வெளியிட் டுள்ளார். மேலும் ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஆனால் ஆளும் கட்சிக்கு ஆதரவாக அவையில் ஒரு நாடகம் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மத்திய அரசு நடந்து கொள்வது இது முதல் முறை அல்ல. பல்வேறு சந்தர்ப்பங்களில் நாடாளு மன்றத்தை புறக்கணித்துவிட்டு பல்வேறு எதேச்சதிகார முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த மசோதாக்கள் மீது நடந்த விவாதத்துக்கு பதில் அளிக்கக்கூட பிரதமர் மோடி தயாராக இல்லை. மாறாக கொடூரமான சட்டங்களைப் ஆதரித்து அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். அரசியல் சாசனத்தின்படி அமைக்கப்பட்ட அனைத்து அமைப்புகளும் தகர்க்கப்படுவது ஜனநாயகத்திற்கு பேராபத்தாகும்.

## தொழிலாளர்களை இனி இஷ்டத்திற்கு வேலையைவிட்டு அனுப்பலாம் மத்திய அரசு மசோதா

இந்தியாவில் தொழில் துறையில் இனிமேல் 300க்கும் குறைவான தொழிலாளர்களை கொண்ட நிறுவனங்கள் தங்கள் இஷ்டத்திற்கு தொழிலாளர் களை எப்போது வேண்டுமானாலும் எவ்வளவு பேரை வேண்டுமானாலும் வேலையை விட்டு அனுப்பும் வகையில் தொழிலாளர் சட்ட விதிகளை மத்திய அரசு திருத்தம் கொண்டுவந்துள்ளது.

அதாவது 300க்கும் குறைவான தொழிலாளர்களை கொண்டு உள்ள நிறுவனங்கள் ஊதியமில்லா விடுப்பு அளிப்பதற்கு இனி அரசின் அனுமதி தேவை யில்லை. இது தொடர்பாக தொழில் துறை வரைவு சட்டம் 2020ல் திருத்தங்களை முன்மொழியும் மசோதாவை தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் தாக்கல் செய்துள்ளது.

தொழில்துறை வரைவு சட்டம் 2019 கடந்த ஆண்டு மக்களவையில் தனிமைப்படுத்தப்பட்டு நாடாளுமன்ற நிலைக் குழுவுக்கு அனுப்பப்பட்டு அது திரும்ப பெறப்பட்டது.

பின்னர் தொழிலாளர் அமைச்சகம் தலையிட்டு தொழில்துறை வரைவு சட்டம் 2020க்கான வரைவு மசோதாவில் 300க்கும் குறைவான தொழிலாளர் களைக் கொண்ட நிறுவனங்கள் இனி அரசு அனுமதியின்றி அவர்களை பணிநீக்கம் செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதனையொட்டி தொழில்துறை உறவுச் சட்டம் 2020ல் பிரிவு 77(1)ல் திருத்தங்களை 2 நாட்களுக்கு முன்மொழிந்து இந்த பிரிவின்படி 300க்கும் குறைவாக ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்கள் இனி ஊழியர்களை வெளியேற்றுவதற்கு முன் அரசிடம் அனுமதி கேட்க தேவை இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது பணிநீக்கம் செய்யலாம் என்ற வார்த்தை ஊதியம் இல்லா விடுப்பில் அனுப்பலாம் என்று மாற்றப்பட்டுள்ளது.

மசோதா தாக்கல் செய்த அமைச்சர் தொழிலாளர் சட்டங்களில் 29 சட்ட பிரிவுகள் 4ஆக குறைக்கப் பட்டு அவை அனைத்தும் ஒப்புதல் பெறப்பட்ட தாகக் கூறினார்.

தற்போதைய சூழலில் நூற்றுக்கும் குறைவான ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்கள் மட்டுமே அரசின் அனுமதியில்லாமல் ஊழியர்களை பணியமர்த்துவும் வெளியேற்றவும் அனுமதி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## காந்தியின் தேசமா! நெஞ்சம் பதறுகிறது

இந்திய தேசமே வெட்கி தலைகுனிய வேண்டிய நிலை உத்தர பிரதேசம் மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் பட்டியலினத்தை சேர்ந்த இளம்பெண் சாதிய ஆதிக்க சக்தியினரால் கும்பல் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அதை செய்த கயவர்கள் பாதிக்கப்பட்ட பெண் உண்மையை சொல்ல கூடாது என்பதற்காக கழுத்து மற்றும் முதுகு எலும்பையும் உடைத்து, நாக்கையும் அறுத்திருக்கின்றனர். இந்த சம்பவம் தேசத்தையே உலுக்கியிருக்கிறது. உயிரிழந்த அந்த பெண்ணின் சடலத்தை கூட குடும்பத்திடம் ஒப்படைக்கவில்லை, காவல்துறை மறுத்திருக்கிறது.

வல்லுறவுக்கு உள்ளான அந்த பெண்ணின் உடலை எரிக்க இத்தனை அவசரம் காட்டிய காவல் துறை தான் இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்ய 8 நாட்கள் காலம் தாழ்த்தி இருக்கிறது. 10 நாட்கள் வரை குற்றவாளிகள் கைது செய்யப்பட வில்லை. இதுபோன்ற காவல்துறையின் பாரபட்ச மான நடவடிக்கையால் தான் இந்த சம்பவம் பற்றி எரிந்து கொண்டிருக்கும் போதே கடந்த இரு தினங்களில் மட்டும் அந்த மாநிலத்தில் 18 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்றனர்.

பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பதுபோல் உத்தரபிரதேசம் மாநிலத்தில் பாஜக தலைவரான யோகி ஆதித்யநாத் ஆட்சியில் அரசு நிர்வாகமும் நீதித்துறையும் செயலிழந்து நிற்கிறது என்று பத்திரிகையில் செய்தி. மேலும் அந்த மாநிலத்தில் அராஜகம், அட்டூழியம் தங்குதடை யின்றி அரங்கேறுகின்றன. நீதி கேட்டு போராட வேண்டிய குடும்பத்தினர் சடலம் கேட்டு போராடும் கையறு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். யாரை காப்பாற்ற பெற்றோர் கையில் மகளின் சடலத்தை ஒப்படைக்காமல் அந்த அவசரமாக நள்ளிரவில் எரிக்க வேண்டும். அதன் பின்னணியில் இருப்ப வர்கள் யார்? யோகி ஆதித்யநாத் அரசு குற்றவாளி களை பாதுகாப்பதில் அவசரம் காட்டும் பின்னணி என்ன? என்பதை விசாரிக்க வேண்டும். காரணம் பெண்ணின்ன் உடலை வலுக்கட்டாயமாக எரித்து முடித்த பின்னர் அங்கிருக்கும் காவல்துறை ஏடிஜிபி பிரசாந்த் குமார் அந்தப் பெண் பாலியல் உறவுக்கு உள்ளாக்கப்படவில்லை என மறைக்க வேண்டிய அவசியம் என்ன?

ஏன். கொரோனாவில் இறந்ததால் உடனே உடலை எரித்தோம் என்று சொன்னாலும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை. காரணம் உத்தரப்பிரதேச பிஜேபி அரசின் பொய் தான். இந்தியாவில் கடந்த ஆண்டை விட இந்தாண்டு பெண்களுக்கு குற்றங்கள் 7% அதிகரித்திருக்கிறது. ஒவ்வொரு 15 நிமிடங் களுக்கும் ஒரு பாலியல் வன்கொடுமை நடைபெறு கின்றது என தேசிய குற்ற ஆவண காப்பக அறிக்கை தெரிவிக்கிறது. இந்தியா முழுவதும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெற்றாலும் இது மாதிரியான மூடநம்பிக்கையும் அரசியல் ரீதியான காரணங்களும் இதில் முதன்மையாக இருக்கிறது.

அதிலும் மத்திய பிஜேபி அரசு முன்னிலையில் இருக்கிறது. இன்று மத்திய ஆட்சியின் கீழ்தான் தேசமும், நீதியும், நிர்வாகமும் இருக்கிறது. இந்த மத்திய பிஜேபி அரசிடமிருந்து தேசத்தையும், பெண்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

## நாட்டின் பன்மைத்துவத்தை பிரதிபலிக்காத கலாச்சார குழு

இந்திய கலாச்சார வரலாற்று ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட நிபுணர் குழு நாட்டின் பன்மைத் துவத்தை பிரதிபலிக்கக் கூடிய வகையில் இல்லை என்று 32 நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் பிரகலாத் படேல் நாடாளுமன்றத்தில் செப்டம்பர் 14ல் இந்தியாவின் கலாச்சாரம் தோற்றுவாய் பற்றியும் அதன் பரிணாமம் குறித்தும் 12 ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கி சென்று ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 16 பேர் கொண்ட ஒரு நிபுணர் குழுவை அமைக்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

## யார் அந்த 16 பேர்

இந்திய தொல்லியல் துறையின் முன்னாள் இணை இயக்குனர் ஜெனரல் கே.என்.தீஷித், ஆர்.எஸ்.பிஷ்ட், தொல்லியல் துறையின் முன்னாள்

துணை இயக்குனர் ஜெனரல் பிடிஆர் மாணி, ஜவஹர்லால் பல்கலைக்கழக பேராசிரியர் சந்தோஷ் சுக்லா, லால் பகதூர் சாஸ்திரி தேசிய சமஸ்கிருத பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரமேஷ் குமார் பாண்டே, அதே பல்கலைக்கழகத்தின் வேந்தர் முகந்தகம் சர்மா, விவேகானந்தா இன்டர்நேஷனல் பவுண்டேஷனை சேர்ந்த மக்கன்லால், இந்திய புவியியல் சர்வே முன்னாள் கூடுதல் இயக்குனர் ஜெனரல் ஜி.என்.ஸ்ரீவத்சவா, தேசிய சமஸ்கிருத சன்ஸ்தானின் துணைவேந்தர் பி.என்.சாஸ்திரி, தில்லி பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையின் தலைவர் பி.சி.சர்மா, ஹைதராபாத் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறையின் டீன் கேகே மிஸ்ரா, தில்லி பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத் துறையைச் சேர்ந்த பல்ராம் சுக்லா, கனடாவை சேர்ந்த ஆசாத் கௌசிக், உலக பிராமணர்கள் பெடரேஷனின் தலைவர் எம்.ஆர்.சர்மா, கலாச்சாரத் துறையின் பிரதிநிதி ஆர்க்கியாலஜிகல் சர்வேயின் பிரதிநிதி என மொத்தம் 16 பேர் இடம்பெற்றனர்.

இந்த குழு 2016ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு விட்டது. ஆனால் இதுகுறித்து அந்த சமயத்தில் யாரும் பெரிதாக பேசப்படவில்லை. கடந்த ஆண்டு பிஜேபி எம்.பி. தேஜஸ்வி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். இந்திய கலாச்சாரம் குறித்து எழுதுவதற்கு அமைக்கப்பட்ட குழு அறிக்கை கொடுக்கப்பட்டதா? பாடப்புத்தகங்களில் இணைக்கப்பட்டு விட்டதா? என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் குழு அறிக்கை சமர்ப்பிக்கப் படவில்லை என்று பதிலளிக்கும் போது தான் இந்த குழுவில் இடம் பெற்றவர்கள் விவரம் தெரிந்து கொள்ளப்பட்டது.

16 பேர் கொண்ட குழுவில் தென்னிந்தியர்கள் இல்லை, வடகிழக்கு இந்தியர்கள் இல்லை, சிறுபான்மையினர் இல்லை, தலித்துகள் இல்லை, பெண்கள் இல்லை. அனேகமாக அக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் இந்திய சமூகத்தின் சாதிய அடுக்கில் உச்சத்தில் அமர்ந்திருக்கின்ற ஒரு சில சமூகக் குழுக்களைச் சேர்ந்தவர்களே.

தென்னிந்திய மொழிகளில் பெருமை மிக்க வரலாற்றையும் மத்திய அரசாலேயே செம்மொழி யாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழ் உள்ளிட்ட ஆய்வாளர்கள் குழுவில் இல்லை. மேலும் 16 பேரில் வரலாற்று ஆசிரியர்களே இல்லாமல் தொல்லியல் துறை சார்ந்தவர்களே இடம் பெற்றிருப்பது எதற்காக எனவும் கேள்வி எழுகிறது.

மத்திய பாஜக அரசு சொல்கிற இந்துத்துவா கலாச்சாரம்தான் இந்திய கலாச்சாரம் என நிறுவவே இந்த குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்திய குழு வின் உள்ளடக்கம் பல கேள்விகளை எழுப்புகிறது. விந்திய மலைக்கு கீழ் இந்தியா இல்லையா? வேத நாகரிகம் தவிர வேறு நாகரிகம் இல்லையா? பாலின பார்வையற்ற தனித்துவமிக்க பன் தேசிய இனங்கள் பல்வேறு சமூகக் குழுக்களை புறந்தள்ளியுள்ள இக்குழுவின் உள்ளடக்கம் இது அமைக்கப்பட்டுள்ள நோக்கம் குறித்து ஐயங்களை எழுப்புகிறது.

## நமது சங்கத்தின் எதிர்கால இயக்கங்கள்

நமது சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் இரண்டு முறை காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. அதில் அனைத்து மாவட்ட மாநில செயற்குழு உறுப்பினர்கள் பங்கேற்றார்கள். அதில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

## செப்டம்பர் 29ம் தேதி அளவிலான எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம்

AISGEF தேசிய செயற் குழுவின் அடிப்படை யிலும் நமது சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் முடிவின்படியும் புதிய பென்சன் ரத்து, தொகுப்பூதியம், ஒப்பந்த, தினக்கூலி ஊழியர்களை வரன்முறைப்படுத்து, பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்க்காதே, தொழிலாளர் நலச்சட்டங்களை திருத்துவதை கைவிடு, காலிப் பணியிடங்களை பூர்த்தி செய் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் அனைத்து அரசு அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டம் அதிக இடங்களில் விரிவான பிரச்சாரம் செய்து மிக சக்தியாக ஆர்ப்பாட்டம் நடத்துவதென மாவட்ட மையங்களை கேட்டுக் கொள்ளப்பட்டது.

## 8.10.2020 IFHRMS திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

கருவூலத் துறையில் மூவாயிம் பணியிடங்கள் காலியாக உள்ளன அதை நிரப்புவதை விட்டு சம்பளப்பட்டியல் அனுமதிக்க விப்ரோ என்ற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதிவேக இணைதள வசதி இல்லாததால் ஒரே நேரத்தில் மாநிலம் முழுவதும் அனைத்து அலுவலகங்களிலும் ஊதிய பட்டியல் தயாரிக்கும் போது இணைய தள சர்வர் காலதமாதமாகிறது. இதனால் அனைத்து துறைகளிலும் சம்பளப்பட்டியல் தயாரிக்கும் ஊழியர்கள் ஒவ்வொருமாதமும் மிகுந்த சிரமத்துடன் ஊதிய பட்டியல் தயாரிக்கின்றனர். வேலை பளு அதிகரிப்பதுடன் தொடர்ந்து மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர். அதிவேக

இணைதள வசதியும் உரிய உள்கட்டமைப்பும் செய்தபின் IFHRMS திட்டத்தை கொண்டுவர தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடந்து தமிழக அரசை வலியுறுத்திவருகிறது. பல கட்ட போராட்டங் களை நடத்திய பிறகு இந்த அரசு தொடந்து ஊழியர் விரோத போக்கை கடைபிடித்து வருகிறது. IFHRMS திட்டத்தில் உள்ள குறைபாடுகளை களைந்தபின் செயலாக்கிடவும், அதுவரை பழைய முறையிலேயே சம்பள பட்டியல் தயாரித்து வழங்கிட தமிழக அரசை வலியுறுத்தி வருகிற 08.10.2020 அன்று ஆர்ப்பாட்டத்தை மிக சக்தியாக நடத்துவதென முடிவாற்றப்பட்டுள்ளது

## 23.10.2020 அன்று கருவூலத்துறை ஆணையர் அவர்களை சந்தித்து பெருந்திரள் முறையீடு

IFHRMS திட்டத்தை எதிர்த்து 23.10.2020 அன்று கருவூலத்துறை அணையர் அவர்களை சந்தித்து பெருந்திரள் முறையீடு நடத்துவதெனவும். அதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அருகில் உள்ள மாவட்டத் தோழர்கள் பங்கேற்பது எனவும் முடிவாற்றப்பட்டது.

## மாநில பிரதிநிதித்துவப் பேரவை டிசம்பர் 2020

நமது அமைப்பு விதியின்படி ஆண்டுக்கு ஒருமுறை வட்டப் பேரவை, மாவட்டப் பிரதிநிதித்துவப் பேரவையும் அதைத் தொடர்ந்து மாநில பிரதிநிதித்துவப் பேரவை நடத்திட வேண்டும். வட்ட, மாவட்ட பேரவைகளை அக்டோபர் 2020 மற்றும் நவம்பரில் நடத்தி முடிப்பது எனவும், செப்டம்பரில் நமது அமைப்பின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை தர்மபுரியில் நடந்த மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது. ஏற்கனவே தர்மபுரியில் கடந்த மார்ச் 2020ல் மாநில செயற்குழு மிகச் சிறப்பாக நடத்த திட்டமிட்டு கொரோனா தொற்றின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. ஆனாலும் சங்கம் தொடங்கிய காலம் முதல் நமது அமைப்பின் மாநில மாநாடு, மாநில பேரவை தர்மபுரியில் நடத்தப்படவில்லை. இருப்பினும் பல்வேறு துறைகளின் மாநில மாநாடு, மாநில பிரதிநிதித்துவப் பேரவை மிக சிறந்த முறையில் நடத்திய மாவட்டம் தருமபுரி. அதோடு மட்டுமல்ல மாநில செயற்குழுவில் மாநில பேரவை நடத்தக் கூடிய மாவட்டங்கள் என்று கேட்கும்போது தர்மபுரி மாவட்டம் மாநில மையம் எதிர்பார்க்காத வகையில் நாங்கள் மிகச் சிறந்த முறையில் நடத்துவோம் என்று மாநில செயற்குழுவில் கூறியது பாராட்டுக்குரியது. தர்மபுரி மாவட்டம் மிக எழுச்சியுடன் இந்த மாநில பிரதிநிதித்துவப் பேரவையை நடத்தி முடிக்கும் என்ற நம்பிக்கை மாநில செயற்குழுவிற்கும், மாநில மையத்திற்கும் உண்டு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

## 23.11.2020 மாலை நேர தர்ணா போராட்டம்

ஏற்கனவே பெற்று வந்த அகவிலைப்படி, சரண்டர் உள்ளிட்ட பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் வழங்க வேண்டும், ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் பங்கேற்றதற்காக 5068 பேருக்கு வழங்கப்பட்ட 17(பி) குற்ற குறிப்பாணை இரத்து செய்ய வேண்டும், ஓய்வு பெறும் நாளில் நமது முன்னாள் மாநிலத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் உள்ளிட்ட 6 தோழர்களின் தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்ய வேண்டும், புதிய பென்சன் திட்டத்தை இரத்து செய்ய வேண்டும், தொகுப்பூதியத்தில் பணிபுரியும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்புற நூலகர்கள், எம்ஆர்பி செவிலியர்கள் ஆகியோருக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், கொரோனா நோய் தொற்று ஏற்பட்டு இறந்த ஊழியருக்கு ரூ.50 இலட்சமும், நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2 இலட்சமும் வழங்க வேண்டும். பழிவாங்கும் நடவடிக்கையாக கோவை மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்கள் மாறுதல், கரூர் மருத்துவக் கல்லூரி ஊழியர்கள் மாறுதல் இரத்து செய்ய வேண்டும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள சனிக்கிழமை விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும், மருத்துவத்துறை ஊழியர்களுக்கு ஒரு மாத சிறப்பு ஊதியம் வழங்கிட அறிவித்த அரசாணையை அமுல்படுத்த வேண்டும், அதேபோல் கொரோனா பணி பார்க்கும் அனைத்து துறை ஊழியர்களுக்கும் சிறப்பு ஊதியம் வழங்கிட வேண்டும், அரசு துறைகளில் காலி பணியிடங்களை நிரப்பிட வேண்டும், காப்பீட்டு திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும், IFHRMS திட்டத்தை தேவையான உள் கட்டமைப்பு வசதிகள் செய்த பிறகே அமுல்படுத்திடவும், இத்திட்டத்தை தனியாரிடம் ஒப்படைப்பதை தவிர்த்து அரசே ஏற்று நடத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 23.11.2020 அன்று மாவட்டத் தலைநகரங்களில் மாலை நேர தர்ணா போராட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது,

இந்த தர்ணா போராட்டத்தில் விரிவான அளவில் நோட்டீஸ், போஸ்டர் போட்டு மாவட்ட மையங்கள் இக்கோரிக்கை குறித்து அனைத்து ஊழியர்களுக்கும்

கொண்டு சேர்க்கும் வகையில் பிரசாரம் செய்து சக்தி மிக்க தர்ணா போராட்டமாக நடத்த வேண்டும் என மாவட்ட மையங்களை கேட்டுக் கொள்கிறது.

ஆம் தோழர்களே எந்த போராட்டத்தையும் நாம் தேடிச் செல்லவில்லை. மத்திய, மாநில அரசுகளின் அலட்சியப் போக்கால் அவை நம்மீது திணிக்கப் பட்டன. இப்போது நாம் மேற்கொள்ள வேண்டியது வெறும் போராட்டம் அல்ல, சமரசமற்ற போர். சூழ்நிலைகளை நாம் போராட்டத்தை மேலும் மேலும் தீவிரப்படுத்தும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி உள்ளோம். எனவே ஒரு சக்திமிக்க போராட்டத்தை நடத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது. நாட்டில் நாலாபுறமும் நிகழும் போராட்டங்கள் நமக்கு உணர்த்தும் உண்மை யாதெனில், உறுதியான மன வலிமையோடு கடுமையான போராட்டத்தை முழுமையான அளவில் நிறுத்திக் காட்டினால் ஒழிய நம்முடைய உரிமைகளைப் பெற முடியாது என்பதாகும். எனவே தோழர்களே அரசு ஊழியர்கள் சங்கம் நடத்தக்கூடிய போராட்டங்களில் இது இன்னொரு வெற்றிகரமான போராட்டமாக அமைவதன் மூலமாகவே நாம் கோரும் உரிமைகளை பெற்றிட முடியும்.

உலகம் மிகவும் துன்பப்படுகிறது கெட்ட மக்களின் வன்முறையால் அல்ல, நல்ல மக்களின் அமைதி காக்கும் காரணத்தால் என்றான் நெப்போலியன் போனபார்ட்டின் இந்த மேற்கோளை இப்படி சொல்லிக் கொடுப்பதே பொருத்தமானதாக இருக்கும். நாடு மிகவும் துன்பப்பப்படுகிறது. ஆள்பவர்களின் அலட்சியத்தால் அல்ல, அரசு ஊழியர்கள் அமைதிகாக்கும் காரணத்தால். எனவே தோழர்களே மேற்கண்ட இயக்கியங்களின் மூலம் நமது உரிமைகளை மீட்டெடுக்க, அமைதி காத்தது போதும். தோழர்களே, ஆள்பவர்களின் அலட்சியப் போக்கினை விரட்டியடிப்போம். **இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பதை இன்னொரு முறை நிகழ்த்திக் காட்ட களம் காண்போம்.** ■

**கொரோனாவிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள தனி மனித இடைவெளியை பின்பற்றுவோம்!**

**முகக் கவசம் அணிவோம்!**

# சிறிதேனும் நம்பிக்கை மாற்றம் எழும்

காவியாளும் மாநிலம்
கயவர் நிறை கள்ளர் நிலம்

பெண்கள் குழந்தைகள் வாழிடம்
தகுதியிலா வெற்றிடம்

நாளும் வல்லுறவு நிகழிடம்
கோளும் கலங்கிடும் கொள்ளிடம்

சாமியார் ஆளும் நடிப்பிடம்-பெண்
ஆசாமிகளுக்கில்லை பாதுகாப்பிடம்

கூட்டுப் பாலியல் வன்மங்கள்
கெட்ட மனங்களின் ஜென்மங்கள்

சீரழித்த பின் சித்திரவதைகள்
சிரசாய் செய்யும் சங்கிகள்

நாக்கறுத்தலும் எலும்புடைத்தலும்
நோக்கும் காவலர் துணைகிடைத்தலில்

ஆட்சிப் பணி காவல் பணி காலிகள்
காட்சியில் பதவிக்காய் பயிர்மேய் வேலிகள்

குற்றம் இழைப்போர்க்கு ஆதரவாய்
முற்றும் எரிப்பர் இரவோடிரவாய்

மணீஷா துடித்து இறந்த துயரங்கள்
பாசிச ஆட்சியின் இமய உயரங்கள்


இதனினும் கொடிது நிகழினும் மோடி
அதனினும் விஞ்சும் மௌனத்தை நாடி

இதுவும் கடந்து போகும் என்போர்
எதுவும் எதிர்க்கா ஜடமாகும் தீயோர்

ஏதேனும் ஒருவழி எதிர்த்தலில் வாழும்
சிறிதேனும் நம்பிக்கை மாற்றம் எழும்

- **பெரணமல்லூர் சேகரன்**

# சிவம் பேசினால் சவமும் எழும்



இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுள் முக்கிய ஆளுமையாய் விளங்கியவர்களுள் சுப்பிரமணிய சிவா குறிப்பிடத்தக்கவர் ஆவார். அரசியலையும் ஆன்மீகத்தையும் இணைத்து விடுதலைக்காக அவர் போராடினார். தமிழக மக்களுக்கு விடுதலைத் தாகம் ஏற்படச்செய்த சிறந்த மேடைப்பேச்சாளர் மற்றும் சிறந்த இதழாளர்; 1913ல் 'ஞானபாநு' இதழை நடத்தினார். விடுதலைப்போராட்ட வீரர் வ.உ.சிதம் பரனாருடனும், மகாகவி பாரதியாருடனும் நெருங்கிப் பழகியவர். இவர் 'வீரமுரசு' எனப் புகழப்பட்டார்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டுவில் 1884ஆம் ஆண்டு அக்டோபர் 4ம் நாள் 'சிவம்' என்றும், 'சிவா' என்றும் அழைக்கப்பட்ட சுப்பிரமணிய சிவா பிறந்தார். இவர் தந்தையார் ராஜம் ஐயர், தாயார் நாகம்மாள் (நாகலட்சுமி). பெற்றோர் இட்ட பெயர் சுப்பராமன். இவருக்கு ஞானாம்பாள், தைலாம்பாளென்ற இரு சகோதரிகளும், வைத்தியநாதன் என்ற ஒரு சகோதரரும் இருந்தனர். இவர் 12 வயது வரை மதுரையில் இருந்தார். கோவை புனித மைக்கேல்ஸ் கல்லூரியில் படித்தார். பின்னர், வறுமை காரணமாக திருவனந்தபுரம் சென்று அங்கு இலவசமாக உணவு படைக்கும் ஊட்டுப்புறையில் உணவருந்திக் கொண்டே, பட்ட மேற்படிப்பு படித்தார். 1899ல் மீனாட்சியம்மை என்பவரைத் திருமணம் செய்துகொண்டார்.

1902ல் திருவனந்தபுரத்திலுள்ள கொட்டாரக் கரையில் நாயர் வகுப்பைச் சேர்ந்த சதானந்த சுவாமிகள் என்ற ராஜயோகியைச் சந்தித்து, அவரிடம் சிலகாலம் ராஜயோகம் பயின்றார். 1906ல் சிவாவின் தந்தை மறைவெய்தினார்.

1906ல் ஆங்கிலேய அதிகாரி கர்சான் பிரபு, வங்கத்தை மதத்தின் அடிப்படையில் இரண்டாகப் பிரித்தார். இந்த பிரிவினைக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. சுதேச உணர்வு மேலோங்கியது. எங்கும் 'வந்தேமாதரம்' என்னும் முழக்கங்கள் எழுந்தன.

190607ல் திருவனந்தபுரத்தில் 'தர்ம பரிபாலன சமாஜம் அமைப்பை, சுப்பிரமணிய சிவா உருவாக்கினார், இளைஞர் களை கூட்டுவித்துச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி, தேசபக்தி ஊட்டும் பணியில் ஈடுபட்டார்.அரசாட்சிக்கு எதிராக இவரின் செயல்பாடுகள் அமைந்ததால், இவர் திருவனந்தபுரத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இதன்பிறகு சுப்பிரமணிய சிவா கால் நடையாகவே ஊர் ஊராய்ச் சென்று தேசிய பிரச்சாரம் செய்ய முற்பட்டார்.

தூத்துக்குடிக்கு வந்தபொழுது தூத்துக்குடியில் வழக்குரைஞ ராக இருந்த ஒட்டப்பிடாரம் வ. உ.சிதம்பரம் பிள்ளை, சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். இக்காலத்தில் சிதம்பரனாருக்கும் சுப்பிரமணிய சிவாவுக்கும் உளமார்ந்த நட்பு ஏற்பட்டது. இவர்களின் சுதேச உணர்வைத் தன் 'சுதேச கீதங்களால்' இவர்களின் நண்பரான பாரதியார் தூண்டிவிட்டார். 1908ல் சிதம்பரனாரும், சிவாவும் இணைந்து நெல்லைச் சீமையில் சுற்றுப்பயணம் செய்து தேசிய பரப்புரை செய்தனர். 12.3.1908ல் சுப்பிரமணிய சிவா இந்திய சுதந்திரம் குறித்த பரப்புரையில் ஈடுபட்டதை ராஜத்துரோகக் குற்றம் புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார் . பின்னர், 2.11.1912ல் விடுதலையடைந்தார்.

பிறகு சுப்பிர மணிய சிவா, சென்னையில் குடியேறி "ஞானபாநு" என்ற மாத இதழைத் தொடங்கினார். இதற்கிடையில் 15.5.1915ல் சிவாவின் மனைவி மீனாட்சி மரணமடைந்தார். பல்வேறு சூழ்நிலை காரணமாக, "ஞானபாநு" இதழ் நின்றதன் பின்பு, 1916ல் 'பிரபஞ்ச மித்திரன்' என்ற வார இதழை அரம்பித்து சிலகாலம் நடத்தினார். இதில் 'நாரதர்' என்ற புனைப்பெயரில், சுப்பிரமணிய சிவா தனது கட்டுரைகளை எழுதிவந்தார். சுமார் இருபது நூல்களுக்கு மேலாக எழுதினார். 1920ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குப் பிரதிநிதியாகச் சென்றார்.

1921ல் துறவி போன்று காவியுடை அணியத் தொடங்கினார். "ஸ்வதந்ரானந்தர்" என்ற பெயரையும் சூட்டிக்கொண்டார்.பாரத மாதாவுக்குக் கோயில் ஒன்று கட்டி முடிக்கத் திட்டம் வகுத்தார். 17.11.1921ல் இரண்டாவது முறையாக, ராஜத்துரோகக் குற்றத்துக்காகச் சிவாவின் மீது, ஆங்கிலேய அரசு வழக்குத் தொடுத்தது. இதில், சுப்பிரமணிய சிவாவுக்கு, இரண்டரை ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. திருச்சி சிறையில் அடைக்கப்பட்ட அவர் அங்கு, தொழு நோய்வாய்ப்பட்டு அவதிபட்டார். படுத்த படுக்கையாகிவிட்ட நிலையில் 12.1.1922ல் விடுதலையானார்.

விடுதலையான சிவா திரும்பவும் சென்னைக்கு வந்து, சில நாட்கள் தங்கினார். உடல்நிலை சற்று தேறியதும், திரும்பவும் அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தார். 1923ம் ஆண்டு தொடக்கத்தில் தருமபுரி, கோவை, பாப்பாரப்பட்டி முதலான ஊர்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பாப்பாரப் பட்டியில் பாரதமாதா கோயிலுக்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தார். அவ்வூரில் நிலம் பெற்று அதற்கு "பாரதபுரம்" என்று பெயர் சூட்டினார். கோயிலுக்கான அடிக்கல் நாட்டு விழாவைச் சித்ரஞ்சன்தாசை க்கொண்டு நடத்தினார். 1924ல் காசியில் வசித்துவந்த இவரது தாயார் காலமானார் . இவருக்கு ஏற்பட்டிருந்த தொழுநோயைக் காரணம் காட்டி, அவர் ரயில் பயணம் செய்ய ஆங்கில அரசு தடைவிதித்தது.

பின்னர் தம்முடைய நாற்பத்தோராவது வயதில் மறைந்தார் சுப்பிரமணிய சிவா.

(அக்டோபர் 4:சுப்பிரமணிய சிவா பிறந்த நாள்..)

**- பெரணமல்லூர் சேகரன்**

# தேவை மீண்டும் ஒரு சுதந்திர போர்

**"அரசும், அரசினது ராணுவமும், போலீசும், நீதிமன்றங்களும், சட்டமும் இவை அனைத்துமே உடைமை வர்க்கத்தின் உரிமைகளை காக்கின்ற வன்முறைக் கருவிகள்.**

**- *மாமேதை காரல் மார்க்ஸ்***

கொரோனா தொற்று உலகம் முழுவதும் பரவி லட்சக்கணக்கில் உலக மக்களை சூறையாடிக் கொண்டிருக்கும் வேளையில் இந்தியாவில் கொரானாவிட கொடியவர்களாக இன்றைய மத்திய மாநில அரசுகள் அப்பாவி மக்கள்மீது தொடர் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கிறது. மத்திய அரசினால் ஏற்பட்டுள்ள பொருளாதார சீர்குலைவினால் இந்தியாவில் வேலையிழப் போரும், வேலைவாய்ப்பற்றோரின் எண்ணிக்கை யும், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறையும், கொள்ளை நோய் சாவை விடகொடுமையான பட்டினிச் சாவுகளும், வறுமையால் குடும்பம் குடும்பமாக தற்கொலை செய்து கொள்வதும், விவசாயிகள் தற்கொலைகள் தொடர்கதையாகி வருவதும், பொருளாதாரக் குற்றங்களும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே இருப்பதும் கவலையளிப்பதாக இருக்கிறது.

ஆனால் பண்டையகாலத்தில் நமது இந்தியா வின் நிலை இவ்வாறு இல்லை. பழங்காலத்தி லிருந்தே விவசாயம் தான் இந்திய பொருளா தாரத்தின் முதுகெலும்பாக இருந்தது. இயற்கை வளங்கள் மிகுந்த இந்தியாவில் தங்கம், வைரங்கள், பட்டு, மசாலா பொருட்கள், கனிமவளங்கள் நிறைந்த இயற்கை எழில் கொஞ்சும் நாடாக இருந்தது. இந்த அற்புதங்களை உள்ளடக் கிய அதிசய நாட்டை பற்றி செவி வழி செய்தியாக கேள்விப் பட்டோரெல்லாம் இந்தியா வை கடல் மார்கமாகவும் நிலம் மார்க்கமாகவும் அடைய துவங்கினர். வாஸ்கோடாகாமா தொடங்கி உலக முழுவதிலிருந் தும் இந்தியாவில் வர்த்தகத் திற்காகவும், செல்வங்களை கொண்டு செல்வதற்காகவும் படையெடுக்கவும் செய்தனர்.

பண்டைய காலங்களிலிருந்தே மத்திய ஆசிய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கலாச்சார தொடர்புகள் இருந்தன. ரஷ்யாவில் இந்தியாவின் வளங்களை பற்றி கேள்விப்பட்ட அபானாசி நிகிடின் (Afanasy Nikitin 1433-1472) என்பவர் இந்தியாவிற்கு யாத்திரிகராக வருகை புரிந்துள்ளார். இவர் தனது நூலில் இந்தியாவை பற்றி இவ்வாறு விவரிக்கிறார். "இந்தியாவில் நிலங்கள் விவசாயத்திற்காக பிரிக்கப்பட்டு உழப்பட்டிருந்தன. நிலங்கள் வளமாகவும், பயிர்கள் செழுமையாகவும் இருக்கின்றன என்று பதிவு செய்துள்ளார். அக்பர் அவையிலிருந்த இஸ்லாமிய கவிஞரான அபுல் பஸல் (Abu al-fazal1551-1602) தனது அயினி அக்பரி என்ற நூலில் "இந்தியா பரந்த நிலப்பரப்பையும், நீர்வளத்தையும், வருடம் முழுவதும் நிலவக்கூடிய தட்ப வெப்ப நிலையும் கொண்டிருப்பதால் பயிரிடுதல் வருடம் முழுவதும் நடைபெற்றன.

சுற்றுலாப்பயணம் செய்ய ரம்மியான மலைப் பிரதேசங்கள், பச்சைப் புல்வெளிகள், மரங்கள் அடர்ந்த காடுகள், விவசாய நிலங்கள் முதலியவை இந்தியாவை ஈடு இணையற்ற நாடாக செய்கின்றது என்று பதிவு செய்துள்ளார். அதேபோல் தென்னிந்தியாவிற்கு வருகை புரிந்த டிபேஜ் என்பவர் தனது நூலில் "தென்னிந்தியா நிலவளம், பசுக்கள், எருமைமாடுகள், ஆடுகள் நிறைந்திருந்த கிராமங்கள் அரிசியை பிரதானமாகவும், சோளம், தானியங்கள் முதலியவற்றையும் பயிரிட்டனர். பருத்தி உற்பத்தி என்பது அளவற்றதாக உள்ளது. உணவு தானியங்கள் மனிதர்களின் தேவைக்கு



போக மீதி தானியங்கள் குதிரைகள் ஆடு மாடுகளுக்கு உணவாக அளிக்கப்பட்டன என்று கூறியுள்ளார்.

பார்போஸா என்ற ஆசிரியர் கோரமண்டல கடற்கரையோர நிலப்பகுதிகள் அரிசி, இறைச்சி, காய்கறிகள் கிடைக்கும் பகுதி என்றும் பனை மரங்களே மலபார் மக்களின் காமதேனு என்றும், குஜராத்தில் இண்டிகோ, கோதுமை, பார்லி, இறைச்சி எனவும், சிந்து நதி பாய்வதால் செழித்து காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மொகலாய பேரரசிற்கு வருகை புரிந்த பாதிரியார் அன்டொனியோ மான்செரேட் (Antonio Monserrate 1536-1600) "இந்தியாவின் வடக்கே செல்ல செல்ல தட்ப வெப்ப நிலை ஐரோப்பாவை ஒத்ததாக இருப்பதால் இங்கு அரிசி கோதுமை, மக்காச்சோளம், பார்லி, பருப்பு வகைகள் பயிரிடப்படுகின்றன. தென்புறத்தில் அதாவது மகாராஷ்டிரா, குஜராத்தில் இண்டிகோ மற்றும் ஓப்பியம் முதலிய பயிர்களால் பெருத்த வருமானத்தை அடைந்தனர்"" என்று தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

உலகின் அத்தனை இயற்கை வளங்களையும் செல்வ செழிப்புகளையும் தன்னகத்தே கொண்ட இந்தியாவில் கி.பி 1757 ல் பிரிட்டானிய கிழக்கிந்திய கம்பெனி (1757-1858) காலூன்றியபின் அதுவரை செல்வச் செழிப்பிலிருந்த இந்திய பொருளாதாரம் சீர்குலைந்தது. ஒருபக்கம் கிழக்கிந்திய கம்பெனிக்காரர்கள் அனைத்து வளங்களையும் சுரண்டிக்கொழுத்து ஆடம்பர வாழ்வு வாழ்ந்தனர். மறுபக்கம் இந்தியர்கள் பட்டினியால் மடிந்து கொண்டிருந்தனர். கிழக்கிந்திய கம்பெனியின் கீழ் இருந்த இந்தியா இங்கிலாந்து விக்டோரியா மகாராணி ஆட்சியின் கீழ் வந்தது. பிரிட்டீஷ் அரசு விவசாயத்துறையில் பல சீர்திருத்தங்களை கொண்டு வந்தாலும் நிலங்கள் ஜமீன்தார் வசமும், பெரிய நிலச் சுவான்தார்கள் வசமும் இருந்தன. அடகு வியாபாரிகளும் இடைத்தரகர்களும் லாபம் கொழித்தனர். ஏழை விவசாயிகள் வறுமையின் விளிம்புக்கு தள்ளப்பட்டனர். இந்திய விவசாயிகள் ஒரு புறம் அந்நியரின் ஆதிக்கத்தாலும் மறுபுறம் உள்நாட்டின் முதலாளித்துவத்தாலும் மக்கள் நசுக்கப்பட்டனர்.

உலகின் தலைசிறந்த தத்துவ மாமேதை கார்ல் மார்க்ஸ் இந்தியர்களின் நிலையை காலனி ஆதிக்கம் என்ற நூலில் (பக்கம் 35-36) ல் இவ்வாறு விவரிக்கிறார் "தற்போதுள்ள இந்தியன் தன்னுடைய பழைய உலகத்தை இழந்து விட்டு புதிய வரவு ஒன்றுமில்லாமல் துக்கத்தில் உழல்கிறான். தற்போதுள்ள பிரிட்டீஷாரால் ஆளப்படுகின்ற இந்துஸ்தானம் தன் தொன்மை வாய்ந்த பாரம்பரியமின்றி, கடந்த கால எல்லா சரித்திரமும் அற்றுப்போய் முற்றிலும் வித்தியாசமாக மாறிவிட்டது." மனித குலத்தின் தீர்க்க தரிசியான மார்க்ஸின் இந்தியாவைப் பற்றிய கணிப்பு இக்காலத்திற்கும் கூட பொருந்தக்கூடியதாக இருக்கிறது.

இந்தியாவில் பிரிட்டீஷ் அரசுக்கு எதிராகவும் நிலச் சுவான்தாரர்களுக்கு எதிராகவும் ஏற்பட்ட புரட்சியில் இந்திய விவசாயிகளின் பங்கு அளப்பரியது. 1793ல் வங்காள உடன்படிக்கையால் பாமர மக்களின் நிலங்கள் ஜமீந்தார்கள் வசமாகியது. பல நூற்றாண்டுகளாக பயிரிட்டு வந்த நிலங்களை இழந்தனர். இடைதரகர்கள் சந்தால் இனமக்களை வாட்டி வீடு பணம் நிலம் முதலியவற்றை காவல் துறை உதவியுடன் கைப்பற்றினர். தொழிலாளர் ஒப்பந்ததாரர்களிடம் பணியாற்றிய சந்தால் இனப்பெண்கள் முகவர்கள் மற்றும் கடன் வழங்கிய ஜமீன்தார்களால் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாகினர். இதனால் கொதித்தெழுந்த சந்தால் இனமக்கள் 1855 ஜுன் 30ல் சித்து, கானு, சாந்து மற்றும் பைரவ் ஆகிய பழங்குடியினத் தலைவர்களின் கீழ் ஆயுதமேந்தி புரட்சியில் ஈடுபட்டனர். இந்தியாவில் ஏற்பட்ட முதல் வர்க போராட்டமும் இதுதான்.

1857ம் ஆண்டு அவுத், மேற்கு உத்திரபிரதேச விவசாயிகள் உள்ளூர் ஜமின்தார்களையும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் ஆங்கிலேய ஆதிக்கத்தையும் எதிர்த்து போராடியதால் கானிங் பிரபு போராடியவர்களின் நிலத்தை பிடுங்க உத்தரவிட்டான். விவசாயிகள் புரட்சிக்குப் பின் அவர்களின் நிலம் திரும்ப வழங்கப்பட்டது.

1860 ம்ஆண்டு நீலப்போராட்டம் எனும் அவுரி விவசாயிகள் பிரச்சினை இந்தியாவின் காலனிய வரலாற்றில் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்தியாவில் ஆறு லட்சம் ஏக்கரில் அபினி செடிகளை சீனாவுக்கு அனுப்பி கொள்ளை லாபம் அடைந்த பிரிட்டீஷ் அரசு அடுத்த இலக்காக களம் இறக்கியது, பிற பயிர்களை பயிரிட விடாது

பணப்பயிரான அவுரி செடியை மட்டுமே பயிரிட வேண்டுமென பிரிட்டீஷ் வணிகர்கள் விவசாயிகளை கட்டாயப்படுத்தினர். இதனால் உணவு பயிர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு செயற்கை பஞ்சம் உருவானது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் இண்டிகோ பயிரிட மறுத்தனர். 1860 ஏப்ரல் மாதம் அவுரி தோட்ட விவசாயிகள் இந்திய வரலாற்றில் முதன் முறையாக வேலை நிறுத்தம் செய்தனர். 1860 ம் ஆண்டு இண்டிகோ கமிஷன் அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் 1862 ஆண்டின் சட்டத்தில் சேர்க்கப்பட்டது.

1875ஆம் ஆண்டில் நடைபெற்ற மராத்திய விவசாயிகள் புரட்சியானது மார்வாடி மற்றும் குஜராத்தி அடகு வியாபாரிகளின் அத்து மீறர்களுக்கு எதிராக நடைபெற்றது. எழுத படிக்கத் தெரியாத சிறு விவசாயிகள் தங்கள் நிலங்களையும், வீடுகளையும் உடைமைகளையும் அடகு வியாபாரிகளிடம் இழந்தனர். அடகு வியாபாரி யிடம் தனது வீட்டை ரூ.150 க்கு அடகு வைத்த தேஷ்முக் என்ற சிறு விவசாயியின் வீடு ஊர்மக்கள் முன்னிலையில் இடிக்கப்பட்டதால் ஊர்மக்கள் வெகுண்டு அடகு கடைக்காரரின் சொத்துக்களுக்கு தீவைத்தனர் அகமது நகர் மாவட்டம் முழுவதும் கலவரம் பரவியது. அரசு கலவரத்திற்கான காரணத்தை அறிய விசாரணைக் கமிஷன் அமைத்தது. 1879ம் ஆண்டின் விவசாய நலச்சட்டத்தில் விவசாயிகளுக்கு சட்டப்பாதுகாப்பு வழங்குமாறு கமிஷன் பரிந்துரைத்தது.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவை சிறிதும் பெரிதுமாக 24 பஞ்சங்கள் தாக்கின. இதனால் பட்டினி இறப்பையும், வேலை யின்மையையும் மக்கள் எதிர் கொள்ள வேண்டிருந்தது. சுமார் 25.00 லட்சம் மக்கள் இறந்தனர். கால்நடைகள் லட்சக்கணக்கில் இறந்தன. எங்கும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை தோன்றியது. 1898, 1901 ஆகிய வருடங்களில் பஞ்ச நிவாரண கமிஷன்கள் அமைத்தாலும் மக்களுக்கு எந்த நிவாணமும் கிடைக்கவில்லை. விவசாய நிலங்களையும் பிரிட்டீஷ் அரசு காப்பாற்ற வில்லை. ஆரம்ப காலத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் ஆங்கில அரசுடனும் செல்வந்தர் களுடனும் கூட்டுச் சேர்ந்து விவசாயிகளின் நலனை புறக்கணித்தது. விவசாயிகளின் நில ஒதுக்கீடு பிரச்சினையில் விவசாயிகள் சார்பாக போராடவில்லை. மாறாக இந்திய தேசிய காங்கிரசை சேர்ந்த ஆர்.சி.தத் என்பவர் கர்சன் பிரபுவுக்கு எழுதிய "கர்சனுக்கு கடிதம்" என்ற கடிதத்தில் நிலச் சுவான்தார்களை ஆதரித்து எழுதியதை கர்சன் பிரபுவே கண்டித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் மகாத்மா காந்திஜியின் அரசியல் வருகையால் விவசாயி களுக்கு விடிவுகாலம் பிறந்தது. விவசாயிகளின் பிரச்சினைகளுக்காக தேசிய அளவில் தீர்வு கிடைக்க அவர் போராடினார். 1918ல் பஞ்சமும் வறட்சியும் நிலவியபோது பம்பாய் அரசு நிலவரியை வசூலிப்பதில் கேதா விவசாயிகளிடம் மிகக்கடுமையாக நடந்துகொண்டது. விளைச்சல் குறைந்த காலங்களில் நிலவரி ரத்து செய்ய வேண்டும் எனும் சட்டம் இருந்தும் அரசு அதை பொருட்படுத்தாததால் காந்திஜி கேதா விவசாயிகளை ஒன்று திரட்டி சத்தியாகிரக போராட்டம் தொடங்கினார்.

1920 ல் கிசான் சபைகள் வங்காளத்திலும், உத்தரபிரதேசத்திலும், பஞ்சாபிலும் தோன்றின. 1928ல் ரயத்துகள் (விவசாயிகள்) சங்கம் ஏற்படுத்தப்பட்டன. எனினும் அகில இந்திய விவசாயிகள் சங்கம் (கிசான்) ஏப்ரல் 11ம் தேதி 1936ல் லக்னோவில் உருவானது. காங்கிரஸ் கட்சி ஜமீன்தார்களுக்கு ஆதரவாக செயல்பட்டதால் கிசான் தலைவராக இருந்த சுவாமி சகஜானந்த் 1945ல் ராஜினாமா செய்ததை தொடர்ந்து அகில இந்திய விவசாயிகள் சங்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வழிநடத்தியது. மிக முக்கியமாக வங்காளத்தில் திபாகா இயக்கம் ஹைதராபாத்தில் தெலுங்கானா புரட்சி, மேற்கிந்தியாவில் வர்லீஸ் புரட்சி ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவை. ஹைதராபாத்தில்

தெலுங்கானா போராட்டம் 1946 முதல் 1951 வரை நடைபெற்றது. தெலுங்கானா விவசாயிகளை ஏமாற்றிவந்த அடகு வியாபாரிகள் நிலச்சுவான் தாரர்கள் நிஜாம் ஊழியர்கள் ஆகியோரை எதிர்த்து போராட்டம் நடைபெற்றது. நிஜாமின் சொத்துக் களில் சுமார் 20.00 லட்சம் பேர் பணிபுரிந்தனர். இப்போராட்டத்தில் பிராஜா மண்டல் இயக்கமும் காங்கிரஸ் மற்றும் ஆர்ய சமாஜத்தின் உறுப்பினர்களையும், ஆந்திர மாநில சுதந்திரம் வேண்டுவோரையும் ஒன்றுதிரட்டி போராடியது கமியூனிஸ்டுகளே. ஹைதராபாத் இந்தியாவுடன் இணைந்தும் போராட்டம் ஓயவில்லை. சென்னை விவசாயிகளும் ஹைதராபாத் விவசாயிகளும் தொடர்ந்து கம்யூனிச ஆதரவில் போராடினர். நிலச் சுவான்தாரர்கள் ஊரைவிட்டே ஓடினர்.

இந்தியாவின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயத்தை காப்பாற்ற சந்தால் போராட்டம் முதல் தெலுங்கானா போராட்டம் வரை இந்தியா முழுவதும் நடந்த எண்ணற்ற விவசாயிகளின் வர்க்கப் போராட்டங்கள் வீரமிக்க அத்தியாயங் களை உள்ளடக்கியது. விவசாயிகள் தங்கள் நிலங்களையும் விவசாயத்தையும் காப்பாற்ற உள்ளூர் நிலச்சுவான்தார்களை, ஜமீன்தாரர்களை எதிர்த்தும் அதே சமயம் அவர்களுக்கு ஆதராவாக இருந்த பிரிட்டீஷ் அரசை நாட்டை விட்டு வெளியேற வலியுறுத்தியும் நடத்திய தீரமிக்க போராட்டங்கள் சுதந்திர போராட்டங்களாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தியா சுதந்திரமடைந்தபின் ஆட்சி பொறுப்பேற்ற காங்கிரஸ் முதற்கொண்டு இப்போது ஆளும் பி.ஜே.பி ஆட்சிவரை அந்நியர்கள் சுரண்டியது போக மீதமுள்ளதை முதலாளித்துவத்தின் சுரண்டல்களுக்காக இந்தியாவின் அத்தனை கதவுககளையும் திறந்து வைத்தன. தற்போது ஆளும் பிஜேபி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளான பிணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி அறிவிப்பு போன்ற நடவடிக்கைகளால் இந்திய பொருளாதாரம் மிக வேகமாக 50 ஆண்டுகளுக்கு பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறது. பொருளாதாரத்தை முன்னேற்றுவதாக கூறி எல்.ஐ.சி முதல் விண்வெளி துறை வரை அனைத்து பொது துறை நிறுவனங்களும் நட்டத்தில் இயங்குவதாக கூறி கார்ப்ரேட்டுகளுக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் அந்நிய முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக 44 தொகுதிகளாக இருந்த தொழிலாளர் சட்டங்களை 4 தொகுதிளாக சுருக்கி விட்டார்கள். சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு மசோதாக்களை கொண்டு வந்து இயற்கை வளங்களுக்கு சமாதி கட்டுகிறார்கள். இதேல்லாம் போதாதென்று விவசாயித்திற்கென ஏற்கனவே இருந்த சட்டங்களை சீர்திருத்தம் செய்யாமல் மத்திய அரசால் செப்டம்பர் 20, 2020 அன்று நிறைவேற்றியுள்ள மூன்று வேளாண் சட்டங்களான 1. வேளாண் உற்பத்தி ஊக்குவிப்பு சட்டம் 2. வேளாண் சேவைகள் திருத்தச்சட்டம் 3. அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம் ஆகிய மூன்று மசோதாக்களும் விவசாயிகள் நலனுக்கெதிராகவும் மாநிலங்களின் உரிமைகளை பறிப்பதாகவும் உள்ளது. விவசாய வர்த்தகத்தில் அரசின் பங்கேற்பை ஒழித்து கட்டுவதை இலக்காக கொண்டிருக்கின்றன. விவசாயத்தை பெருநிறுவன மயமாக்கும் (கார்ப்பரேட்) பெரிய செயல் திட்டத்தின் பங்காகவும் விவசாயத்துக்கு அரசு அளித்துவரும் ஆதரவை விலக்கிக்கொள்ளும் முயற்சியெனவும் விவசாய அமைப்புகள் கருதுகின்றன.

மேற்படி வேளாண் சட்டங்களுக்கெதிராகவும், வேளாண் சட்டங்களில் திருத்தம் செய்யப்படும் வரையும் பஞ்சாப், ஹரியானாவை தொடர்ந்து தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் நடத்துகின்றனர். வேளாண் சட்டங்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர கேரள அரசு திட்டமிட்டுள்ளது.

விவசாயத்தில் பெரும் முதலாளித்துவத்திற்கு ஆதரவாக இந்தியாவில் கொண்டு வரும் புதிய சட்டங்களால் கார்ப்பரேட்டுகளுக்கான விவசாயமாகமாறும். நம் மண்ணுக்கேற்ற விவசாயம் மறையும், இயற்கை சார்ந்த உயிரினங்கள் அழியும் அபாயம் ஏற்படும், இயற்கை வளமும், மனித வளமும் இவர்களின் சுரண்டலுக்கு ஆளாகி மிக விரைவில் இயற்கை வளங்கள் எல்லாம் அழியக்கூடும், நம் எதிர்கால சந்ததியே கேள்விக்குறியாக்கும் அபாயகரமான ஆட்சியாளர்களை தூக்கியெறியவும், நமது மண்ணையும், மக்களையும் மீட்கவும், உலக கார்ப்பரேட்டுகளிடமிருந்தும் அவர்களுக்கு பக்க பலமாக இருக்கும் உள்ளூர் துஷ்ட சக்திகளிட மிருந்தும் இந்தியாவை மீட்கவும் தேவை மீண்டும் ஒரு சுதந்திர போர்.

இந்தியா முழுமைக்கும் உள்ள விவசாய சங்கங்கள், அனைத்து மத்திய மாநில தொழிற் சங்கங்கள், தேசபக்த உணர்வு மிக்க பொதுமக்கள் மாணவர்கள் என அனைவரையும் இந்திய தேச நலனுக்காக முற்போக்கு இடதுசாரி கட்சிகள் ஒருமித்த கருத்துடன் வலுமிக்க அணியை திரட்டி புரட்சிகரமான போராட்டங்களை நடத்தி இன்றைய முதலாளித்துவ சுரண்டல்களுக்கெதிராக வர்க அரசியலை முன்னெடுக்க வேண்டும். அதே சமயம் மாமேதை மார்க்ஸ் கூறியது போல எதிர்கால இந்தியா சிறப்பாக இருக்க வேண்டு மானால் கடந்த கால இந்தியாவின் தொன்மையை மீட்டெடுக்க வேண்டிய அவசியம் நம் கண் முன்னே நிற்கிறது.

- **தெ. வாசுகி**

# உணவு பாதுகாப்பை அச்சுறுத்தும் வேளாண் விரோத சட்டங்கள்



இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம், பொருளாதாரத்தின் அச்சாணி விவசாயம் என்று சொல்லிக் கொண்டு, 20 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயிகளையும், விவசாயத்தையும் அழித்தொழிந்து வருகிறது இந்திய அரசு.

விவசாயிகளை பலி கொடுத்து, கார்ப்பரேட்டுகளுக்கு கரசேவை செய்யவும், வேளாண்மைத் துறையில் அந்நிய முதலீட்டையும், கட்டுப்பாடற்ற சுரண்டலையும் உள்நுழைக்கும் வேளாண் சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஊடரங்கால் தமது விளைப்பொருட்களை விற்க முடியாமல் பெரும் நட்டத்தைச் சந்தித்த இந்திய விவசாயிகள் மீது வேளாண் மசோதா என்ற பெயரில் அடுத்த இடி விழுந்துள்ளது.

வேளாண் மசோதா, குறைந்தபட்ச ஆதார விலையை மறுத்தல், அரசு தானியக் கொள்முதல் நிலையங்களை மூடல், அத்தியாவசிய உணவு பொருள்களை சந்தை நோக்கத்திற்காக திறந்து விடுதல், ஒப்பந்த வேளாண்மை எனும் பெயரால் உழவர்களை கார்ப்பரேட்டுகளின் கொத்தடிமையாக மாற்றுதல் என்றும் அச்சுறுத்தல்களை கொண்டிருக்கின்றன.

'அத்தியாவசிய உணவுப்பொருள் சட்டத்தில் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாக்களின் முக்கியமான இலக்கு பொது விநியோக திட்டம்தான்.'

நெல், கோதுமை உள்ளிட்ட 24 வேளாண் விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதாரவிலையினை உயர்த்தி வழங்க விவசாயிகள் கோரி வரும் நிலையில் இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையினைவிட ரூ.500 குறைவாகவே வழங்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டுக்குள் விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்கப் போவதாக தம்பட்டம் அடிக்கும் அரசுகளின் செயல், கேப்பையில் நெய் வடியப் போகிறது நம்புகள் விவசாய பெருமக்களே! என்பது போல் உள்ளது. விவசாயத்திற்கான உள்ளீடு பொருட்கள் மற்றும் உற்பத்தி செலவுகள் அதிகமாகவும், குறைந்த பட்ச ஆதரவு விலை என்பது குறைவாகவும் இருக்கும்போது, விவசாயிகளுக்கு எவ்வகையில் இலாபம் கிடைக்கும்.

குறைந்தபட்ச ஆதார விலையின் நோக்கம், அந்த விலைக்கு கீழாக வேளாண் பொருட்களை தனியார் கொள்முதல் செய்யக்கூடாது என்பதுதான். ஆனால் வேளாண் மசோதா அதற்கு எதிர்மறையாகத்தான் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய விவசாயிகள் தமது பகுதியிலுள்ள ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விளைபொருட்களை விற்க முடியும் என்ற கட்டுப்பாட்டை அடியோடு இரத்து செய்யும் இந்த அவசர சட்டம், இனி ஒழுங்குமுறை விற்பனைகூட வரம்புகள் மற்றும் மாநில வரம்புகளையும், தாண்டி இந்தியாவின் எந்த பகுதியிலும் விற்பனை செய்து கொள்ளலாம் என்கிறது வேளாண் சட்டம். நமது விளைப்பொருட்களை உள்ளூரிலேயே கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைப்பதை உத்தரவாதப்படுத்தாத இந்திய அரசு, உற்பத்தி பொருளுக்கு நல்ல விலை கிடைக்க அகில இந்திய சந்தைக்கு வாருங்கள் என்று அழைக்கும் வேளாண் மசோதா தேவன் அழைக்கிறார் பரலோகம் வாருங்கள் என்பது போல் உள்ளது.

தானிய வியாபாரிகள் உள்ளூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பதிவு செய்திருக்க வேண்டும், மாநில அரசு வழங்கும் உரிமம் பெற்றிருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை இரத்து செய்யும் இந்த சட்டம், பான்கார்டை மட்டுமே உரிமமாக அங்கீகரித்து இந்தியாவின் எந்தவொரு பகுதியை சார்ந்த விவசாயும் எந்த பகுதியிலும் நேரடியாக கொள்முதல் செய்ய அனுமதி அளித்திருப்பது 'ஒரே நாடு ஒரே சந்தை' என்ற கூற்றை பிரதிப்பலிக்கிறது.

இந்தச் சீர்திருத்தங்களால் விவசாய அடிக்கட்டுமான திட்டங்களில் குறிப்பாக, குளிர்பதனக் கிடங்குகளை அமைப்பது உள்ளிட்டவற்றில் தனியார் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனமிட முன்வருவார்கள். அதனால், விவசாய விளைபொருட்களைச் சேமித்து வைத்து, நல்ல விலை கிடைக்கும் நேரத்தில் விற்பனை செய்யும் வாய்ப்பு விவசாயிகளுக்குக் கிடைப்பதோடு, அவர்களது விளைபொருட்கள் அழுகி வீணாவது தடுக்கப்படும் என்ற தேன் தடவிய வாதங்களாலும் இத்தனியார்மயம் அபாயம் மூடிமறைக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கான விலை உத்திரவாதம் மற்றும் வேளாண் சேவைகள் மீதான ஒப்பந்த பாதுகாப்பு அவசர சட்டம் என்ற நீளமான பெயர் கொண்ட இந்த சட்டத்தை சுருக்கமாக இரண்டே வார்த்தைகளில் சொன்னால் அதன் பெயர் ஒப்பந்த விவசாய சட்டம், பல்வேறு மாநிலங்களிலும் ஒப்பந்த விவசாயத்திற்கென தனித்தனி சட்டங்களை இயற்றியிருக்கும் நிலையில், அவற்றுக்கெல்லாம் மேலாக மத்திய சட்டமாக வேளாண் சட்டத்தை இயற்றி அதற்கு ஏற்றவாறு இதுவே என் கட்டளை இதுவே எனது சாசனம் என்பதுபோல் மாநில அரசுகள் தமது சட்டங்களை திருத்த கட்டளையிட்டிருக்கிறது.

ஒவ்வொரு பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையின் பின்னும் அரசு தனது சமூகப் பொறுப்புகளிலிருந்து கழண்டு கொள்வதைக் கடந்த முப்பதாண்டுகளாகப் பார்த்து வருகிறோம். இந்த வேளாண் சீர்திருத்தங்களின் விளைவும் அதுவாகத்தான் இருக்கும். குறிப்பாக, நெல்லையும் கோதுமையையும் இந்திய உணவுக் கழகம் கொள்முதல் செய்து இருப்பு வைப்பது படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இறுதியில் கைகழுவிவிடும் நிலை ஏற்படும். வேளாண் விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயித்துவரும் அரசின் நடைமுறை கைவிடப்படும். இவை இரண்டும் உலக வர்த்தகக் கழகத்தின் நிகழ்ச்சி நிரலில் ஏற்கெனவே இருந்து வருவதை நினைவில் கொண்டால், இந்தச் மசோதாக்கள் தற்போதுள்ள உணவுப் பாதுகாப்பையும், விலைக் கட்டுப்பாட்டையும் முற்றிலுமாக ஒழித்துக்கட்டுவதை நோக்கித்தான் செல்லும்.

இவ்வாறான நிலையில் எந்த வகையான சீர்திருத்தங்களை மைய அரசு மேற்கொண்டிருக்க வேண்டும்? குறைந்தபட்சமாக, விவசாயிகள் கோரி வருகிறபடி 50 சதவீதம் இலாபம் தரத்தக்க வகையில் வேளாண் பொருட்களின் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்திருக்க வேண்டும். நெல், கோதுமை மட்டுமின்றி, மற்றைய அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் கொள்முதல் செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் ஏற்றபடி இந்திய உணவுக் கழகத்தின் கட்டமைப்பையும் விதிகளையும் மாற்றி அமைத்திருக்க வேண்டும். அரசு நிர்ணயிக்கும் அல்லது விவசாயிகள் தீர்மானிக்கும் விலை வெளிச்சந்தையில் கிடைப்பதை உத்தரவாதம் செய்யக்கூடிய கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்கியிருக்க வேண்டும். குறிப்பாக, இத்தகைய அமைப்புகளில் விவசாயிகளின் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் அளிக்கக்கூடிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும். இந்த வகையான சீர்திருத்தங்கள்தான் விவசாயிகளின் வருமானத்தை உத்தரவாதப்படுத்துவதோடு, இந்திய மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பை வழங்கும்.

**- கோ.பழனியம்மாள்**

# எழுந்து வா என் தோழா !

*அரசு ஊழியர் சங்கமே!*
*ஆற்றல் மிக்க சங்கமே!*
*அறிவான தலைமை கண்ட சங்கமே*
*வணக்கம் எங்கள் வணக்கம்*

*அரசு ஊழியர் சங்கத்துக்கு நல்ல*
*தலைமைக் குழு இருக்கு*
*நாடதிரும் வலிமை இருக்கு*
*நற்குணங்கள் நிரம்பி இருக்கு*

*அரசாங்கத்தின் கண்ணாடி நம்*
*முகத்தை காட்டிடும்*
*அனைத்து துறை ஊழியர்களையும்*
*அரவணைத்து காத்திடும்*

*உரிமைக்காக குரல் கொடுத்து*
*உண்மையை நிலை நாட்டிடும்*
*போராட்டத்தை முன்னெடுத்து*
*போர்குணத்தை காட்டிடும்*

*கோரிக்கைகள் பல உண்டு*
*கோஷங்கள் பல உண்டு*
*சோதனைகளை துடைத்தெறிந்த*
*சாதனைகள் பல உண்டு*

*அடிமை தனத்தை உடைத்தெறிந்து*
*ஆர்ப்பரித்து எழுந்த இயக்கம்*
*மனித நேயம் காத்து நின்று*
*மாற்றங்கள் செய்த இயக்கம்*

*இருக்கையிலிருந்து எழு இளைஞனே*
*அரசு ஊழியரின் இருக்(கை)களை பற்று*
*தோழனே*

*நாளும் வெற்றி நமக்கிருக்கு*
*நன்மைகள் பலவும் கிடைச்சிருக்கு*

*தெளிவு பெற்று ஒளிருவோம்*
*சிறுமை கண்டு பொங்குவோம்*
*இன்னும் என்ன தயக்கம் உனக்கு*
*வழி காட்ட அரசு ஊழியர் இயக்கமிருக்கு*

***- தமிழ் சுடர்***

# ஜாக்டோ-ஜியோ சார்பில் சட்டமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை மனு

கடந்த 2019 ஜனவரியில் தமிழகத்தில் ஆசிரியர்கள் - அரசு ஊழியர்களின் கூட்டமைப் பான ஜாக்டோ - ஜியோ காலவரையற்ற வேலைநிறுத்தம் போராட்டத்தில் ஈடுபட்டு, அதனால் குற்றக் குறிப்பாணைகள் வழங்கப்பட்ட 5068 ஆசிரியர்கள் - அரசு ஊழியர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளை ரத்து செய்தல், புதிய தேசிய கல்விக் கொள்கையை நிராகரித்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக, எதிர்வரும் 14.09.20 அன்று கூடவுள்ள தமிழக சட்டமன்றத் கூட்டத் தொடரில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் குரல் எழுப்ப வேண்டும் என்பதற்காக, தமிழகத்திலுள்ள அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்து முறையீடு வழங்குவது என்ற மாநில ஜாக்டோ - ஜியோ முடிவின்படி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து முறையீடு வழங்கப்பட்டது.

## திருச்சி

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வளர்மதி நடராஜன் அவர்களை சந்தித்து மனு கொடுக்கப்பட்டது.

திருச்சி மாவட்ட கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் கே.என்.நேரு அவர்களை சந்தித்து மனு கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருச்சி மாவட்ட ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர் மற்றும் அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள் அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் பெரியசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் செ.பால்ராஜ் மற்றும் வீ.பார்த்தசாரதி ஆகியோர் தலைமையில் 12.09.2020 அன்று பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. மைதீன்கான் மற்றும் திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் ஆகியோரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட தலைவர் பி.ராஜ்குமார், ஜாக்டோ ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட உயர்மட்ட குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## நாகை

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் திரு ஓ.எஸ்.மணியன் அவர்களையும் சட்டமன்ற உறுப்பினர்கள் இராதாகிருஷ்ணன் (மயிலாடுதுறை), பாரதி (சீர்காழி) ஆகியோரை நேரில் சந்தித்தும், நாகப்பட்டினம், கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி அலுவலகங்களிலும் மாவட்ட ஜாக்டோ - ஜியோ தலைவர்கள் அ.தி.அன்பழகன், பா.இரவி, வெ.சரவணன் (மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்), எம்.காந்தி (மாவட்ட நிதிக் காப்பாளர்), ப.அந்துவன் சேரல் (மாநிலத் தலைவர், புள்ளியியல் சார்நிலை அலுவலர்கள் சங்கம்), பா.ராணி (மாநில பொதுச் செயலாளர், கிராம் சுகாதார செவிலியர் சங்கம்) ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி உரிய விளக்கமளித்து மனு அளித்தனர்.

மனுவை பெற்றுக்கொண்ட மாண்புமிகு அமைச்சர் ஓ.எஸ்.மணியன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகள் குறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்தனர்.

## கடலூர்

காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.நாக.முருகமாறன் அவர்களிடம் அளிக்கப் பட்டது.

## கிருட்டினகிரி

ஓசூர் சட்டமன்ற உறுப்பினரிடம் ஜாக்டோ-ஜியோ சார்பாக கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

## நீலகிரி

கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் திருவாளர் திராவிடமணி அவர்களிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.ஆர்.ஆஸ்ரா, ஆனந்தன், கந்தசாமி, மாரியப்பன், காயத்ரி மற்றும் குணா ஆகியோர் சேர்ந்து கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

## தேனி

பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார் அவர்களிடம் மனு கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் இரா.ரெங்கராஜன், த.இராமகிருட்டிணன், கௌதம் அசோக்குமார் மற்றும் எர்ரன் TNPTF, சு.ரவிக்குமார் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், ஆர்.ரவீந்திரன், ஆசிரியர் மன்றம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர்

கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பொன்னேரி தொகுதி சட்ட மன்ற உறுப்பினரும் சென்னை பல்கலைக்கழக செனட்குழு உறுப்பினரான சிறுணியம் ப.பலராமன் ஆகியோரிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜாக்டோஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் இரா.தாஸ், திருவள்ளூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஞானசேகரன் காந்திமதிநாதன் மற்றும் பிரபாகரன்,செந்தில் வளவன், சரவணன், லோகைய்யா மற்றும் பலர் பங்கேற்றனர்.

## நாமக்கல்

சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் பாஸ்கர் அவர்களிடம் மாவட்ட நிர்வாகிகள் கோரிக்கை மனு அளித்தனர்.

## காஞ்சிபுரம்

மாண்புமிகு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திருவாளர் ராஜா,

திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருவாளர் பழனி,

செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அரசு, ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திருவாளர் தா.மோ.அன்பரசன் ஆகியோரிடம் கோரிக்கை அனு அளித்து பேசப்பட்டது.

இந்நிகழ்வில் மாநில செய்தி தொடர்பாளர் கு.தியாகராஜன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் துரை.மருதன், க.பாலாஜி எஸ்.ரஞ்சித்சிங், க.கதிரவன், நித்யநிர்மல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலை

திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் எ.வ.வேலு,

கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கு.பிச்சாண்டி,

செங்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.கிரி ஆகியோரை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

## திண்டுக்கல்

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற உறுப்பினரிடம் ஜாக்டோஜியோ சார்பில் முறையீடு இன்று வழங்கப்பட்டது.

## சிவகங்கை

காதி மற்றும் கதர் கிராமத் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு பாஸ்கரன் அவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

இதில் ஜாக்டோ ஜியோ மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர் அ.சங்கர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மு.செல்வக்குமார், இரா.முத்துச்சாமி ஆகியோர் தலைமையில் ஜாக்டோ-ஜியோ உறுப்பு சங்கங்களின் மாநில, மாவட்ட நிர்வாகிகளான இளங்கோ, சிங்கராயர், பீட்டர், பாண்டி, சுரேஷ், பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை

முன்னாள் மத்திய அமைச்சரும் தற்போதைய திருமயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான திரு.எஸ்.ரகுபதி அவர்களை ஜாக்டோ - ஜியோவின் மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் மன்றம் நா.சண்முகநாதன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் இரா.ரங்கசாமி, மு.ராஜாங்கம் மற்றும் ஆசிரியர் மன்ற மாநில பொதுக்குழு உறுப்பினர் ந.ரவிச்சந்திரன் ஆகியோர் சந்தித்து ஜாக்டோ - ஜியோவின் கோரிக்கை மனுவை அளித்தனர்.

■

# 29.09.2020 தேசிய எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம்

புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து செய்திட, சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், எம்ஆர்பி செவிலியர்கள் உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கிட, அரசுத் துறைகளிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்பிட, பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாத்திட, தொழிலாளர் நலச்சட்டங்களில் பாதகமான திருத்தங்களை கைவிட, உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின்படி 29.09.2020 அன்று தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### சென்னை

வடசென்னை மாவட்டமும் தென் சென்னை மாவட்டமும் இணைந்து சேப்பாக்கம் வளாகத்தில் நடைபெற்றது. வடசென்னை மாவட்ட தலைவர் சுந்தரம்மாள் தலைமையேற்றார். கோரிக்கைகளை குறித்து தென்சென்னை மாவட்ட தலைவர் டேனியல் ஜெயசிங், வடசென்னை மாவட்ட செயலாளர் அந்தோணிசாமி ஆகியோர் பேசினர். இறுதியாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவரும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் துணைப் பொதுச் செயலாளருமான மு.அன்பரசு கருத்துரையாற்றி னார். நிறைவாக வடசென்னை மாவட்ட துணை தலைவர் பத்மநாபன் நன்றி கூறினார்.

### காஞ்சிபுரம்

திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் மாவட்ட இணை செயலாளர் ரஞ்சித்சிங் தலைமையில் மாவட்ட செயலாளர் சிவ.தினகரன் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்க மாவட்ட துணை தலைவர் டி.கண்ணன் நன்றி கூறினார் . மாவட்ட செயலாளர் துரை.மருதன், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்கம் வட்டார தலைவர் பாலாஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட பொருளாளர் திருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. மகளிர் துணைக்குழு சிவ.பானுமதி சிறப்புரையாற்றினார். வட்ட இணை செயலாளர் கண்ணபிரான் நன்றி கூறினார்.

வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர்கள் சங்கம் மாவட்ட இணை செயலாளர் நவின்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் வெ.லெனின் சிறப்புரையாற்றினார் வட்ட பொருளாளர் கி.குமரேசன் நன்றி கூறினார்.

வாலாசாபாத் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் வட்ட தலைவர் சீதா சீனிவாசன் தலைமையில் வட்ட செயலாளர் பாலு ஆர்பாட்ட உரையாற்றினார். தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க வட்டார தலைவர் மோகன் நன்றி கூறினார்.

குன்றத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் வட்ட இணை செயலாளர் அற்புதராஜ் தலைமையேற்றார். தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர்கள் சங்க பாரதி சிறப்புரையாற்றினார். வட்ட துணை தலைவர் தினேஷ் நன்றி கூறினார் . மாவட்ட தணிக்கையாளர் திலகவதி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க டி.நிர்மலா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலகம் முன் நடைபெற்றது தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட செயலாளர் கி.மாணிக்கவேலு தலைமையில் மாவட்டத் தலைவர் வெ லெனின் சிறப்புரையாற்றினார். வட்ட பொருளாளர் கி.குமரேசன் நன்றி கூறினார்.

### திருவண்ணாமலை

தண்டராம்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் மாவட்ட துணைத் தலைவர் கோ. அண்ணாமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேலும் செங்கம் கிளை, வந்தவாசி கிளை, திருவண்ணாமலை தெற்கு கிளை, கீழ்பென்னாத்தூர், போளூர் வட்டாட்சியர் அலுவலக வளாகங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## கிருட்டினகிரி



ஒசூர், சூளகிரி, கிருட்டினகிரி வட்டக் கிளைகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட நிர்வாகிகள் சந்திரன், சி.கல்யாணசுந்தரம், ஜெகதாம்பிகா, மஞ்சுளா ஆகியோரும், வட்டக் கிளை நிர்வாகிகள், வெங்கடேசன், கி.மணி, செல்வகுமார், சி.தினேஷ், கனகவல்லி, தனலட்சுமி, செந்தில், வினோத்குமார், வி.சிவா, வி.திம்மராஜ், தேன்மொழி மற்றும் முன்னணி ஊழியர்களுடன் முன்னாள் மாவட்ட நிர்வாகிகள் சந்திரசேகரன், சி.பி.ஜெயராமன் ஆகியோர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் 53 பெண் ஊழியர்கள் உட்பட மொத்தம் 127 பேர் பங்கேற்றனர்.

## தருமபுரி

பென்னாகரம் வட்டக்கிளை தலைவர் திம்மராயன் தலைமையில் நெடுஞ்சாலை துறை அலுவலகம் முன்பும் ஆர்பாட்டம் நடைபெற்றது. வட்டகிளை செயலாளர் தோழர் பெருமாள், மாவட்ட இணை செயலாளர் செ.காவேரி ஆகியோர் விளக்கவுரையாற்றினர். வட்டக்கிளை துணைத் தலைவர் நன்றி கூறினார்.

பாப்பிரெட்டிப்பட்டி வட்டக்கிளை, நல்லம்பள்ளி வட்டக்கிளை, அரூர் வட்டக் கிளை, காரிமங்கலம் வட்டக் கிளைகளில் ஆர்பாட்டம் நடைபெற்றது.

## சேலம்

மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு க.முத்துக்குமரன் தலைமையில் து.சிங்கராயன், கோரிக்கை விளக்க உரையாற்றினார். ப.சண்முகம் வாழ்த்தி பேசினார். இறுதியாக லீலாதேவி நன்றி கூறினார்.

## நாமக்கல்

பரமத்தி மற்றும் கபிலர்மலை ஊராட்சி ஒன்றிய அலுவலங்கள் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் கு.இராஜேந்திர பிரசாத் அவர்கள் தலைமை ஏற்றார்.

## ஈரோடு

சத்தியமங்கலம் வட்ட கிளை சார்பாக மதிய நேர ஆர்பாட்டம் நெடுஞ்சாலை துறை அலுவலக முன்பும், பெருந்துரை வட்டக் கிளையிலும் நடைபெற்றது.

## கோவை

வடக்கு மற்றும் கிணத்துக்கடவு வட்டக் கிளைகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோவை தமிழ்நாடு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் கோவை வடக்கு வட்டக்கிளை சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோவை வடக்கு வட்டக்கிளை இணைச்செயலாளர் இராமசாமி தலைமையேற்றார். மாவட்டச் செயலாளர் குமார் விளக்கவுரை நிகழ்த்தினார். முன்னாள் மாவட்டப் பொருளாளர் ரெங்கராஜ் மாவட்டத் துணைத் தலைவர் நடராஜ் வாழ்த்தி பேசினர். கோவை வடக்கு வட்டக்கிளைத் தலைவர் பால்ராஜ் மற்றும் வட்டக்கிளைத் துணைத் தலைவர் இரவி முன்னிலை வகித்தனர். கிளைப்பொருளாளர் ஞானப்பிரகாசம் நன்றி கூறினார்.

## நீலகிரி

பந்தலூர் வட்டம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வட்ட துணை தலைவர் சக்கீர் தலைமையில் நடைபெற்றது. மாநில செயலாளர் சி.பரமேஸ்வரி சிறப்புரை ஆற்றினார். வட்ட இனை செயலாளர் மகேஸ்வரி நன்றி கூறினார். முன்னனி ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.

கோத்தகிரியில் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம் முன்பும், கூடலூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## கரூர்

கரூர் 2வட்ட கிளையின் சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது. வட்ட தலைவர் கோ.லட்சுமணன் தலைமை தாங்கினார். மாவட்ட துணைத் தலைவர் எம்.எஸ்.அன்பழகன், தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் பொன். ஜெயராம், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் மாவட்டச்

செயலாளர் மழை கொழுந்தன், அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் கே.சக்திவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிறைவாக தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மபாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

குளித்தலை வட்ட கிளை சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டகிளை செயலாளர் ஜெயவேல் பாண்டியன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கரூர் மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம் சிறப்புரை யாற்றினார். தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்கத்தின் ராஜேந்திரன் நன்றி கூறினார். ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. கூட்டத்திற்கு வட்டகிளை தலைவர் தங்கபாண்டியன் தலைமை தாங்கினார் கோரிக்கை வலியுறுத்தி மாவட்ட தலைவர் வி.சுப்பிரமணியன் பேசினார். ஆர்பாட்டத்தில் வட்ட கிளை துணை தலைவர் பாஸ்கரன், வருவாய் வட்டகிளையின் பாலகிருஷ்ணன், வட்ட செயலாளர் ரஹ்மதுல்லா மற்றும் பலர் கலந்து கொண்டனர். நிறைவாக வட்ட பொருளாளர் நன்றி கூறினார்.

கிருஷ்ணராயபுரம் வட்ட கிளை சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மண்மங்கலம் வட்டகிளையின் சார்பாக தாலுக்கா அலுவலகம் முன்பு வட்ட தலைவர் சுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. வட்ட செயலாளர் கோபி வரவேற்றார். வட்டக் கிளையின் தலைவர் அறிவழகன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட தலைவர் சுப்பிரமணியன் சிறப்புரை ஆற்றினார். நிறைவாக சௌந்தரவல்லி நன்றி கூறினார்.

## பெரம்பலூர்

மாவட்டத் தலைவர் இளங்கோவன் தலைமை யில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ப.குமரி அனந்தன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர்கள் சிவக்குமார், கொளஞ்சி, மாவட்ட இணைச் செயலாளர் சு.சரவணசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் சி.சுப்பிரமணியன் கண்டன உரையாற்றினர். மாவட்ட பொருளாளர் பெ.ராஜராஜன் நன்றி கூறினார்.

## அரியலூர்

செந்துறை வட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## திருச்சி

மன்னார்புரம் பல்துறை வளாகத்தில் மாவட்ட துணைத் தலைவர் ராஜேந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பழனிசாமி கோரிக்கை விளக்க உரையாற்றினார். கூட்டுறவுத் துறை சங்கத்தின் சார்பில் மாவட்ட துணைத் தலைவர் மாரிக்கண்ணு, கூட்டுறவுத்துறை சங்கத்தின் மாவட்ட செயலாளர் வினோத்குமார், அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் ஜீவானந்தம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநிலத் துணைத் தலைவர் ஆ.பெரியசாமி சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் சுந்தர்ராஜ் நன்றி கூறினார்.

தொட்டியம் வட்ட கிளை சார்பாக தேசிய தின ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## திருவள்ளூர்



திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டம்

## புதுக்கோட்டை

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.

## திண்டுக்கல்

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மதிய உணவு இடைவேளையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் செந்தூர்ராஜன் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

பழநி வட்டக்கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில துணை தலைவர் இரா.மங்கள பாண்டியன் சிறப்புரையாற்றினார்.



திண்டுக்கல் கிழக்கு வட்ட அலுவலக தேசிய எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம்.

நிலக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். சென்னா கிருஷ்ணா (வருவாய்த்துறை), சிவகுமார் (சாலை பணியாளர் சங்கம்), சுரேஷ்குமார் (பட்டு வளர்ச்சித்துறை), செல்வம் (சத்துணவுத் துறை), ரமேஷ் (ஊரக வளர்ச்சித் துறை), ராஜா )பேரூராட்சி) ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

மாவட்ட செயலாளர் எஸ்.முபாரக் அலி கோரிக்கை விளக்க உரையாற்றினார். காமராஜ் நன்றி கூறினார். வட்ட கிளை இணைச்செயலாளர் மற்றும் வட்டாட்சியர் உட்பட பலர் கலந்து கொண்டனர்,

திண்டுக்கல் மாவட்டத்தில் திண்டுக்கல் 2, பழனி, ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், நத்தம், நிலக்கோட்டை, ஆத்தூர், கொடைக்கானல், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகிய கிளைகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## விருதுநகர்

வத்திராயிருப்பு பேரூராட்சி அலுவலகம் முன்பு விருதுநகர் மாவட்ட தலைவர் த.பால் முருகன் தலைமையில் நடைபெற்றது. பேரூராட்சி ஊழியர் சங்க இணை செயலாளர் த.சீனிவாசன் நன்றி கூறினார். அதில் சே.இராமச்சந்திரன் மற்றும் தோழமை சங்க முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிவகாசி வட்டக்கிளை சார்பில் இளங்கோ தலைமையில் நடைபெற்றது. எம்.மணிமாலாபாண்டியன் முன்னிலை வகித்தார்.



மாவட்ட செயலாளர் கா.கருப்பையா கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

## தூத்துக்குடி

தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சாத்தான் குளத்தில்ல் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

## நாகப்பட்டினம்

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் து.இளவரசன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். சீர்காழி வட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்ட துணைத் தலைவர் எஸ்.ஜோதிமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கருஷ்ணமூர்த்தி நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.கலா நன்றியுரையாற்றினார். 30 பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## கள்ளக்குறிச்சி

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட தலைவர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது கோரிக்கைகள் விளக்கி மாவட்ட செயலாளர் கே.மகாலிங்கம் பேசினார். மாவட்ட துணை தலைவர் வீரபத்திரன், மாவட்ட இணைச்செயலாளர் வேலு, தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் கொளஞ்சி வேலு, மாவட்ட துணைத்தலைவர் அரவிந்தன், மாவட்ட தணிக்கையாளர் குமார், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பார்வதி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கள்ளக்குறிச்சி வட்டச் செயலாளர் குமாரதேவன், முன்னாள் வட்டத் தலைவர் சுந்தர்பாபு, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் வடிவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தஞ்சை

கும்பகோணம் வட்டத்தில் வட்டத்தலைவர் கி.விஸ்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. தஞ்சாவூர் வடக்கு மற்றும் பாபநாசத்திலும் நடைபெற்றது.

## சிவகங்கை

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## கடலூர்

காட்டுமன்னார்கோயில் வட்டக்கிளையில் குமராட்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு பார்த்திபன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வட்ட செயலாளர் ஏ.பிரகாஷ் நன்றி கூறினார். ஆர்பாட்டத்தில் 10க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## திருப்பூர்

தாராபுரம் வட்டக்கிளை சார்பில் உணவு இடைவேளை ஆர்ப்பாட்டம் வட்டாச்சியர் அலுவலகத்தின் முன்பு நடைபெற்றது.

சத்தியமங்கலம் வட்டக் கிளை சார்பாக ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மாலை நேர ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் ப.மணிவண்ணன் தலைமையேற்றார். இதில் சத்தி அரசு ஊழியர் சங்க வட்டக் கிளை செயலாளர் செந்தில்நாதன், ராஜ், அருள் டேனியல், முருகன், மருத்துவ துறை கார்த்தி, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சரத், அருள்மாறன், பொருளார் ந.முத்துசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்கள்

உடுமலைப்பேட்டை வட்டகிளையின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு துணைத்தலைவர் நாகராஜன் தலைமை தலைமையேற்றார். செயலாளர் வெங்கிடுசாமி விளக்கவுரையாற்றினார். கல்லூரி கல்விதுறை அலுவலர் சங்கத்தின் சண்முகசுந்தரம் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட இனைசெயலாளர் ஜி.திலீப் சிறப்புரையாற்றினார். வட்டக்கிளை நிர்வாகிகள் பரமேஸ்வரன், ஜி.புஸ்பவள்ளி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜெகதீஸ்வரன் நன்றி கூறினார்.

## தேனி

உசிலம்பட்டி வட்டக்கிளை செல்லம்பட்டி ஒன்றியத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு துணைத் தலைவர் ஜெயபால் தலைமையேற்றார். தலைவர் பி அய்யங்காளை கோரிக்கை விளக்கவுரையாற்றினார். ஊரக வளர்ச்சித்துறையின் மாவட்ட இனைச்செயலாளர் சிவமணி வாழ்த்தி பேசினார். வட்டக்கிளை பொருளாளர் ஜி.மனோகரன் நன்றி கூறினார்.

உசிலம்பட்டி ஒன்றியத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் துறையின் அன்பழகன் தலைமையேற்றார். செயலாளர் வி.ஆசை கோரிக்கை விளக்கவுரையாற்றினார். துறைவாரி மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் தீனன் வாழ்த்தி பேசினார். முருகன் (மாநில செயலாளர் தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி) சிறப்புரையாற்றினார். ஜெயராஜ் நன்றி கூறினார். முன்னாள் வட்டக்கிளை இணைச் செயலாளர். கி.ரமேஷ்குமார் வட்டாரச் செயலாளர். தமிழ் நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணியின் வட்டார பொருளாளர் தமிழ்மணி நன்றி கூறினார்.

ஆண்டிபட்டி வட்டக்கிளை சார்பில் தேனி அரசு மருத்துவக்கல்லூரி வளாகம், தேனி அரசு பெருந் திட்ட வளாகம் முன்பு நடைபெற்றது.

## கடலூர்

பொதுப் பணி கணக்கு மற்றும் ஆட்சித் துறை கடலூர் (PWD) அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட இணை செயலாளர், மற்றும் PWD மாநில செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரி

குழித்துறை நகராட்சி , மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், கிள்ளியூர் பேரூராட்சி, அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், கொட்டாரம் பேரூராட்சி, நாகர்கோவில் மாநகராட்சி போன்ற அலுவலகங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## செங்கற்பட்டு

அச்சிறுப்பாக்கத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்துத்துறை மருந்தாளுநர் சங்க மாவட்ட நிர்வாகி அந்தோணி ஜவஹர் தலைமையேற்றார். மாவட்டப் பொருளாளர் ஸ்ரீராம் கோரிக்கை விளக்கவுரை ஆற்றினார். வட்டச் செயற்குழு உறுப்பினர் உமாமகேஸ்வரி நன்றி கூறினார்.

## மதுரை

மேலுர் வட்டக்கிளையில் தேசிய அளவிலான எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ■

# இந்தியாவில் 64 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த ஐந்தாண்டு திட்டம் உருவான நாள் அக்டோபர்-1



1928, சோவியத் யூனியன் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கியது. ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக ஒரு திட்டம் தீட்டி நடைமுறைப் படுத்துவது என்பது உலக வரலாற்றில் அப்போதுதான் புதியதாக நிகழ்ந்தது. நிறுவனங்களுக்கான இலக்குகளை அதன் முதலாளிகள் நிர்ணயித்து செயலாற்றுவதை மட்டுமே உலகம் அதுவரை கண்டிருந்தது. ஆனால், முதலாளிகளே இல்லாமல் போனால் அந்த நாட்டில் வளர்ச்சி எப்படி நிகழ முடியும் என்று வினா எழுப்பப்பட்டபோது நாட்டுக்கே இலக்கு நிர்ணயித்தது சோவியத் யூனியன். அதிலும் 5 ஆண்டுகளுக்குள் அடைய வேண்டும் என்று கால வரையறை நிர்ணயிக்கும் துணிவு ஸ்டாலினுக்கு மட்டுமே இருந்திருக்க முடியும். அமெரிக்கா அஞ்சும் மிகப்பெரிய சக்தியாக தொழிற்துறை வளர்ச்சி மூலம் சோவியத்தை மாற்றிய பயணத்தை இந்த முதல் ஐந்தாண்டுத் திட்டம் துவக்கி வைத்தது என்றால் மிகையல்ல. 5 ஆண்டுகளில் அடையத் திட்டமிட்ட இலக்கை 4 ஆண்டுகள் 3 மாதங்களில் அடைந்தபோது, கனரகத் தொழில்கள் மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்திருந்தன. 1928 முதல் 1937 வரையிலான காலத்தில் சோவியத்தின் தொழிற்துறை உற்பத்தி 3 மடங்காக அதிகரித்தது. 1940ல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவடைவதற்கு முன்னரே, அமெரிக்கா ஒன்றைத் தவிர உலகின் மற்ற அனைத்து நாடுகளையும் விட தொழில் வளர்ச்சி பெற்ற நாடாக சோவியத் உயர்ந்தது. இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியை வெல்லும் பலத்தை ஐந்தாண்டுத் திட்டங்களே சோவியத்துக்கு உருவாக்கித் தந்தன என்றால் மிகையாகாது. 1985 வரை தொடர்ந்த ஐந்தாண்டு திட்டங்கள் பல்வேறு துறைகளிலும் மிகப்பெரும் வெற்றிகளை ஈட்ட சோவியத்துக்கு உதவி செய்தன. அது மட்டுமின்றி, இந்தியா, பாகிஸ்தான், சீனா, நேபாளம், பூட்டான், ரோமானியா, தென்கொரியா, வியட்னாம், எத்தியோப்பியா, அர்ஜென்டினா உள்ளிட்ட பல நாடுகள் ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டி நடைமுறைபடுத்தவும் இதுவே வழிகாட்டியாக அமைந்தது.

மாநிலங்களின் வளர்ச்சிக்காக இந்தியாவில் திட்டக் குழு என்ற பெயரில் ஐந்தாண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 1950 மார்ச் 15 ஆம் நாள் இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாட்டின் வளங்களைக் கணக்கிட்டு குறைவான வளங்களை பெருக்குதல் ஏற்ற தாழ்வுகளை நீக்குதல் இதன் முக்கிய பணியாகும். இந்த அமைப்பின் முதல் தலைவராக ஜவகர்லால் நேரு செயல்பட்டார். திட்டக் குழுவின் உறுப்பினர்களாக மத்திய அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் செயல்பட்டனர். திட்டக்குழு அரசுக்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாக செயல்பட்டது. இறுதி அங்கீகாரம் வழங்கும் பணியினை தேசிய வளர்ச்சி குழு மேற்கொண்டது. 1951ல் முதலாவது ஐந்தாண்டு திட்டம் (1951 - 1956) அதன் தொடர்ச்சியாக 12வது ஐந்தாண்டு திட்டம் (2012- 2017) வகுக்கப்பட்டது. 2014ல் பிரதமர் மோடி அவர்கள் தனது முதல் சுதந்திர தின உரையில் இந்தியாவின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் இந்த அமைப்பை மாற்றியமைப்பதை விட புதிய அமைப்பை உருவாக்குவது நல்லது என்று சொல்லி திட்டக் குழு அமைப்பை கலைத்துவிட்டு மாற்றாக நிதி ஆயோக் அமைப்பு கொண்டு வரப்படும் என்ற அறிவிப்பின் மூலம் இந்தியாவில் கடந்த 64 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த திட்டக்குழுவை காணாமல் போகச் செய்துள்ளார்.

- மு.பாஸ்கரன்

# வாசகர் வட்டம்






தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருட்டினகிரி மாவட்ட மையத்தின் சார்பாக 19.09.2020 அன்று கிருட்டினகிரியில் உள்ள அரசு ஊழியர் சங்க கட்டடத்தில் "அரசு ஊழியர் மாத இதழ்-வாசகர் வட்டம்" நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் ஜெகதாம்பிகா வரவேற்புரையாற்றினார்.

வாசகர் வட்டத்தில் 2020-செப்டம்பர் மாத அரசு ஊழியர் இதழில் வெளிவந்த கட்டுரைகளின் மீது கலந்துகொண்ட தோழர்களில், கிருட்டினகிரி வட்ட தலைவர் வெங்கடேசன், "பெண்ணுரிமையோடு சொத்துரிமையும் காப்போம்", தேன்கனிக்கோட்டை வட்ட செயலாளர் முருகேசன், "செப்டம்பர்-13 தோழர் ஜதின் தாஸ் நினைவு நாள்", சூளகிரி வட்ட செயற்குழு உறுப்பினர் வினோத்குமார் மற்றும் கிருட்டினகிரி வட்ட செயற்குழு உறுப்புனர் செல்வகுமார், "சுதந்திர இந்தியாவின் நிலை அன்றும் இன்றும் ", மாவட்ட இணைச் செயலாளர் சி.கல்யாணசுந்தரம், "அமெரிக்க வல்லரசை மண்ணை கவ்வ வைத்த வியட்நாம்", சூளகிரி வட்ட பொருளாளர் சி. தினேஷ், "விவசாயத்தை, விவசாயியை அழிக்கும் ஒப்பந்த சாகுபடி சட்டம்" என்ற தலைப்புகளின் மீது கருத்துரையாற்றினர். "அம்பேத்கர் பற்றி" என்ற தலைப்பில் சூளகிரி வட்ட தலைவர் வி.சப்தமோகன் கருத்துரையாற்றினார். நிறைவுரையாற்றி பேசிய மாநில துணைத்தலைவர் கோ.பழனியம்மாளிடம் வாசகர் வட்டத்தின் முத்தாய்ப்பாக 240 அரசு ஊழியர் மாத இதழ் சந்தா முகவரி பட்டியல் வழங்கியதோடு, 2020ஆம் ஆண்டு உறுப்பினர் சந்தா 2,000க்கான காசோலை வழங்கப்பட்டது. மாவட்ட பொருளாளர் தேவராஜ் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார். ■

## தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் 34வது சங்க அமைப்பு தினம்







13.09.1987 அன்று வரலாற்று சிறப்புமிக்க வேலூர் மாநகரில், தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு 33 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் சங்கத்தின் 34ஆம் ஆண்டு சங்க அமைப்பு தினம் 13.09.2020 முதல் தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மருத்துவ நிலையங்கள் மற்றும் அலுவலகங்களில் ஒரு வார காலத்திற்கு அமைப்பு தின கொடியேற்ற நிகழ்ச்சி மிக எழுச்சியாக நடைபெற்றது. ஸ்தாபனம் தோன்றிய வரலாறு பற்றியும், சாதனைகள் பற்றியும் ஊழியர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது அனைத்து மாவட்டங்களிலும் மிகத் திரளான ஊழியர்கள் ஆர்வமுடன் பங்கேற்று கேட்டறிந்தனர். ■

☞ **புதுதில்லியில் AISGEF கொடியை**

☞ **தாங்கி நிற்கும் சொந்த கட்டிடத்தின்**

☞ **சிவந்த செங்கற்களாக...**

☞ **நெடிதுயர்ந்த தூண்களாக...**




# நம்முடைய நிதி பங்களிப்பு சிறக்கட்டும்!

*அன்பிற்கினியவர்களே,*

*வணக்கம்.*

*நாடு முழுவதுமுள்ள 60 லட்சம் மாநில அரசு ஊழியர்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாப்பதற்கு மட்டுமல்லாது தேச ஒற்றுமையை பாதுகாப்பதிலும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் இந்திய நாட்டின் தொழில்களும், வணிகமும் பாதுகாக்கப்படவும் அயராது குரல் கொடுத்துவரும் இந்திய நாட்டின் மிகப்பெரிய ஒரே அமைப்பாக திகழ்ந்துவரும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் அகில இந்திய அலுவலக கட்டிடம் சுகுமால் சென் பவன் என்ற பெயரில் புதுதில்லியில் 15,000 சதுர அடியில் 3 தளங்களைக் கொண்ட கட்டிடமாக கட்டிடத் தீர்மானித்து அதன் பணிகள் தற்போது துவங்கி நடைபெற்று வருகின்றது. அதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் அரசு ஊழியர்களிடம் நிதி சேகரிப்பு பணிகளும் நடைபெற்று வரும் நிலையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் தமிழகத்தின் நிதி பங்களிப்பும் தாராளமாக தந்து உதவிட வேண்டியுள்ளது.*

### அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தோற்றம்

தமிழ்நாட்டில் உள்ள அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக தமிழ்நாடு அரசு ஊழியர் இயக்கம் செயல்படுவதுபோல், ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கும் ஊழியர் சங்கங்கள் ஒன்றிணைந்து இந்தியா முழுமைக்குமான அரசு ஊழியர்களுக்கான ஒரு அமைப்பாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் இயங்கி வருகிறது. இது உருவான வரலாற்றுக்குப் பின்னே இந்தியா முழுவதிலும் அரசு அலுவலகங்களில் பணி புரிந்த அரசு ஊழியர்களின் கண்ணீரும், வியர்வையும், அவர்கள் பட்ட அவமானங்களும், கஷ்டங்களும், நுகத்தடியில் உழன்ற அடிமைத்தனங்களும் இருந்தன என்பதை இன்றைய அரசு ஊழியர் சமுதாயம் அறிந்து வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு பிரிட்டிஷ் அரசில் நியமிக்கப்பட்ட குமாஸ்தாக்களும்/ அதிகாரிகளும் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்ட போதிலும் அவர்கள் ஏற்கெனவே பிரிட்டிஷ் அரசாங்கத்தில், பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் இயந்திரங்களாக கருதப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்ட போக்கு இந்தியா சுதந்திரமடைந்த பிறகும் மாறவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் அதன் குமாஸ்தாக்கள் மீது விதித்திருந்த கட்டுப்பாடுகள் தடை உத்தரவுகள், எழுத்துரிமை மறுப்பு, பேச்சுரிமை மறுப்பு போன்றவைகளை சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவை வழிநடத்திய அரசுகளும் தொடர்ந்து மேற்கொண்டன.

சுதந்திர இந்தியாவின் ஆட்சியாளர்களும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் ஏதேச்சதிகார கோட்பாடுகளை விட்டொழிக்காமல் அதை அரசு ஊழியர்கள் மீது செலுத்தி அவர்களை அடிமைகளாவே வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினார்கள். அதனால் அரசு ஊழியர்களின் உரிமைகளிலும் ஊதியங்களிலும் கட்டுப்பாடுகளையும், வெட்டுப்பாடுகளையும் விதித்தார்கள். பிரிட்டிஷ்கால ஆட்சியில் அரசு ஊழியர்கள் நடத்தப்பட்டதை விட சுதந்திர இந்தியாவில் அரசு ஊழியர்கள் மோசமாக நடத்தப்படும் சூழ்நிலை உருவானது. அரசியல்களத்தில் அரசு ஊழியர்களை நுழைய விட்டால் அது ஆள்பவர்களுக்கு ஆபத்தாக முடிந்துவிடும் என்பதில் கவனமாகயிருந்த இந்திய அரசியல்வாதிகள், இந்திய அரசு ஊழியர்களுக்கு ‘அரசு ஊழியர் நடத்தைவிதிகள்’ என்ற மூக்கணாங்கயிரை மாட்டினார்கள். இதன்மூலம் அரசு ஊழியர்களும் அவர்தம் குடும்பத்தினரும்

நேரடியாகவோ மறைமுகமாகவோ அரசியல் கட்சி சார்புடன் இருக்கக்கூடாது என அச்சுறுத்தி அரசு ஊழியர்களை அரசியலிலிருந்து ஒதுக்கி வைக்க முயற்சித்தார்கள். இதனால் அரசு ஊழியர்கள் அரசாங்கத்திற்கு அடிமைகளாகவே சேவகம் செய்யும் நிலை எழுந்தது. இத்தகைய சூழ்நிலையில், ஆட்சியாளர்களின் அடிமைத்தளையிலிருந்து விடுபடவும், அடக்குமுறைகளையும் எதிர்க்கவும், இருக்கும் உரிமைகளைக் காக்கவும், புதிய உரிமைகளைக் கேட்கவும், இந்தியா முழுமைக்குமான ஒரு அமைப்பு அரசு ஊழியர்களுக்காக ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. இந்தக் கருத்து மெல்ல மெல்ல வலுப்பெற்று, மேலெழும்பி, அது சுதந்திர இந்தியாவின் பதிமூன்றாண்டு கால அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலையின் பின்னணியில் 1960ம் ஆண்டு ஜனவரியில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனமாக உருப்பெற்றது.

### அரசு ஊழியர்களின் பாதுகாவலன்

கடந்த 60 ஆண்டுகளாக இந்தியாவில் அரசு அலுவலகங்களில் பணியாற்றிய மற்றும் பணியாற்றும் அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக மட்டுமில்லாமல் பிறதுறை சார்ந்த தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், கட்டுமான ஊழியர்கள் போன்ற பலதரப்பட்ட உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைக்காகவும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் குரல் கொடுத்து வருவதன் மூலம் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய தொழிற்சங்கங்களுக்கு இணையாக இன்று உயர்ந்து நிற்கிறது. தமிழகத்தில் அரசுத் துறைகளில் உள்ள 60க்கும் மேற்பட்ட சங்கங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஆதரவுடன், இந்தியா முழுவதிலுமிருந்து சுமார் 60 லட்சம் ஊழியர்களின் பிரதிநிதித்துவம் கொண்ட அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் கடந்த 60 ஆண்டுகளாக இந்தியா முழுவதிலுமுள்ள அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தும், போராடியும், அரசு ஊழியர்களை ஒன்றிணைத்தும் எந்த அரசாங்கமும் அரசு ஊழியர்களின் உரிமைகளை தட்டிச்செல்லாதபடி கட்டிக்காத்து வருகிறது.

இந்தியா முழுவதிலும் உள்ள அரசு ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது, பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பது, பொருளாதார மேம்பாட்டிற்காக உழைப்பது, சமூகப் பாதுகாப்பிற்காக பாடுபடுவது மற்றும் சுரண்டலற்ற சமுதாயத்தை உருவாக்க போராடுவது போன்ற உயரிய நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட இச்சம்மேளனம் கடந்த 60 ஆண்டுகளாக அந்த நோக்கங்களுக்காக தொடர்ந்து போராடி வருகிறது.

### அரசு ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக சமரசமற்ற சமர் புரியும் சம்மேளனம்

1990ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு பின்பற்றி வரும் புதிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மிகுந்த பாதிப்புகளுக்கு ஆளாகி வருகின்றனர். ஆனால் பெருநிறுவன முதலாளிகளோ இந்த புதிய பொருளாதாரக் கொள்கை மூலம் கொழுத்து வருகிறார்கள். அரசாங்கங்களும் உள்நாட்டு வெளிநாட்டு பெருநிறுவனங்களின் நலன்களுக்கு ஆதரவாக செயல்படுகின்றனவே தவிர உழைக்கும் தொழிலாளர்கள், ஊழியர்கள் நலன்களை குப்பைத் தொட்டியில் வீசிவிட்டதாகவே அதன் நடவடிக்கைகள் இன்றுவரை தெரிகின்றன. சாலைகள் அமைத்தல், ரயில்பாதைகள் அமைத்தல், மின்சார உற்பத்தி, நீர்ப்பாசன வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இந்த பெருநிறுவனங்கள் முன் வருவதில்லை. ஆனால் வியாபார நோக்குடன் கூடிய லாபமீட்டும் தொழிற்சாலைகள் அமைக்க முன்வருவதும் அவற்றுக்கு மத்திய, மாநில அரசுகள் சிறப்பு சலுகைகள் காட்டுவதும் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. உற்பத்தித் துறையில் தேக்கம், யூக வணிகம், ரியல் எஸ்டேட் வணிகம் போன்றவை அரசின் ஆசியுடன் பீடுநடை போடுகின்றன.

அரசு ஊழியர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது, அரசியல்கட்சி சார்புடன் செயல்படக்கூடாது என்றெல்லாம் விதிகளை வகுப்பதால் மட்டும், அரசு எதைச் செய்தாலும் அதை அரசு ஊழியர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதையும், அரசு ஊழியர்களும் மக்களில் ஒருபகுதியினரே என்பதையும் நாட்டில் நடக்கும் நல்லது கெட்டதுகள் பற்றி உரைக்கவும், அவற்றுக்காக போராடவும் அவர்களுக்கு உரிமை உண்டு என்பதையும் கடந்த 60 ஆண்டுகளாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் பலவிதமான போராட்டங்கள் மூலம் இந்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசுகளுக்கும் உணர்த்தி வந்துள்ளது.

### பேரிடர் காலங்களில் மக்களின் ஊழியர்களின் பாதுகாவலன்

இந்தியா முழுவதிலும் ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கத்தினரும் அரசுத்துறைகளை தனியார்வசம் ஆக்கிட துடித்துக் கொண்டிருக்கும் நிலையில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள

அரசு ஊழியர்களை ஒன்றிணைத்து அவர்களை தங்கள் உரிமைகளுக்காக போராட அடித்தளம் அமைத்துக் கொடுத்து அவர்களுக்கு பாதுகாப்பு அரணாக திகழ்ந்து வருகிறது. நாட்டில் எந்த பாதிப்பு வந்தாலும், ஏற்படுகின்ற நெருக்கடிகளுக்கு முதல் தீர்வாக அரசு ஊழியர்களின் உரிமைகளில் கை வைப்பதை வாடிக்கையாக ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரவர்க்கமும் கொண்டிருக் கிறார்கள். எந்த நிதி நெருக்கடி யானாலும், வெள்ளம், வறட்சி, பசி பட்டினி, கோவிட் போன்ற பேரிடர் காலங்களில் அரசு ஊழியர்கள் தாமாக வந்து தாராளமாக நிதியாகவோ பொருளாகவோ உதவியது போக, அரசாங்கமே ஒரு பெருந்தொகையை அரசு ஊழியர்களின் சம்பளத்திலிருந்து வெட்டி விடுவதை வாடிக்கையாக கொண்டிருக்கிறார்கள். கஜானாவில் பணம் இல்லை என்றால் பணத்தை கொண்டுவரும் வழியைத் தேடாமல் யாருடைய உரிமைகளில் கைவைத்தால் நிலைமையை சமாளிக்கலாம் என்று எண்ணிய உடனேயே அவர்களுக்கு ஞாபகம் வருவது அரசு ஊழியர்களின் மாதச் சம்பளம், ஆட்குறைப்பு நடவடிக்கை, துறைகளை தனியார் மயமாக்குதல் போன்றவைதான். இத்தகைய மோசமான நிலைமையை நாம் மாற்றாவிட்டால் நமக்கும் நமது சந்ததியினருக்கும் நாம் பெரும் துரோகம் இழைத்துவிட்டவர்களாகி விடுவோம். அரசு ஊழியர்களை அரசு ஏமாற்றும் போக்கை தொடர விடாமல் அதற்கு தக்க பாடம் புகட்ட வேண்டும். அதற்கு நம் கரம் மட்டுமல்ல அகில இந்திய அளவில் கரம் கொடுத்து ஊக்கப்படுத்தி உற்சாகப் படுத்தி உறுதியோடு போராட வைத்திருக்கிறது இந்த அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்.

## அகில இந்திய அளவில் அரசு ஊழியர்களுக்கான நிரந்தர முகவரி

அரசு நமக்கு உறுதியளித்துள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பபெறும் நடவடிக்கைகள், 21 மாத நிலுவைத் தொகையினை பெறுதல், ஊதிய முரண்பாடுகளை களைதல், சிறப்புக் காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வரையறுத்தல், அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துதல் போன்றவற்றிற்காக ஒரு மாபெரும் போராட்டக்களத்தில் நின்று நம்முடைய உரிமைகளை போராடிப் பெறுவது என்ற உறுதியோடு நாம் இருக்கிறோம். நம்முடைய போராட்டங்களுக்கு வலு சேர்க்கவும், வழிகாட்டவும், களமிறங்கி அகில இந்திய அளவில் கவனம் ஈர்க்கவும் ஒரு முழுமையான அமைப்பாக அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளனம் விளங்கி வருகிறது. அத்தகையதொரு அமைப்புக்கு அறுபது ஆண்டுகள் கடந்து சொந்தக் கட்டிடம் வேண்டும் என்ற அவசியம் எழுந்திருக்கிறது. நம்முடைய உரிமைகளை தட்டிக்கேட்கவும் விட்டுவிடாமல் காக்கவும் இந்தியாவில் உள்ள அனைத்து அரசு ஊழியர்களுக்காக உரத்துக் குரல் கொடுக்கவும், தலைநகராம் புது தில்லியில் தலைமையகம் தற்போது அவசியமாகியுள்ளது. இதற்கான இடத்தை தேர்வு செய்து இந்தியாவில் உள்ள அனைத்து மாநில அரசு ஊழியர்களின் பங்களிப்புடன் கடந்த ஆண்டு இடம் வாங்கப்பட்டு தற்போது அதில் கட்டிடம் கட்டிட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள அரசு ஊழியர்கள் தலைநகர் தில்லியில் தங்களுக்கான நிரந்தர முகவரி வேண்டும் என்ற உறுதிப்பாட்டின் பேரில் கட்டிட நிதியை மனமுவந்து வழங்கி வருகிறார்கள்.

## சிவந்த செங்கற்களாக... வானுயர்ந்த தூண்களாக... நம்முடைய நிதி இருக்கட்டும்

நம்முடைய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தைப் பொறுத்தவரை நாமும் ஒரு கௌரவமான தொகையை அளித்து புதுதில்லியில் நிரந்தரமாக நிமிர்ந்து நிற்கக்கூடிய கட்டிடத்தை உருவாக்கியதில் பங்களிப்பு செய்தோம் என்ற பெருமையை சேர்ப்போம். நம்முடைய உரிமைகளை தொடர்ந்து காக்க வேண்டும் என்றால் சமரசம் செய்துகொள்ளாத ஒரு அமைப்பு மட்டும் இருந்தால் போதாது அது தன் சொந்த முகவரியோடு உறுதியோடும் கம்பீரத்தோடும் நின்றிட வேண்டும். இந்திய அளவில் அரசு ஊழியர்களின் நிரந்தர முகவரியாக இந்தக் கட்டிடம் எழும்பி நிற்கவும், அரசு ஊழியர்களின் உரிமைகளை பறிக்க நினைப்பவர்களுக்கு சிம்மசொப்பனமாகத் திகழக் கூடிய அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கட்டிடத்தின் சிவந்த செங்கற்களாகவும் வானுயர்ந்த தூண்களாகவும் தமிழ்நாடு அரசு ஊழியர்களின் பங்களிப்பு பெருமை சேர்க்க நாம் ஒவ்வொருவரும் தாராளமாக கட்டிட நிதியுதவி அளிப்போம்.

## நிதி செலுத்தும் ஏற்பாடுகள்

கட்டிட நிதியுதவி அளிக்கும் தோழர்கள் தங்கள் நிதியினை காசோலைகளாக, வங்கி வரைவுகளாக, பணமாக அல்லது டிஜிட்டல் பரிவர்த்தனையாக செலுத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தாங்கள் செலுத்த விரும்பும் தொகையை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு “அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன சுகுமால் சென் பவன் கட்டிட நிதி'' என்ற பெயரில் செலுத்தி அதற்கான ரசீதுகளை பெற்றுக் கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

*- மாநில மையம்*

# பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை பாதுகாப்பு சட்டங்கள்

இவ்வுலகிலேயே சீரும் சிறப்பும் வாய்ந்தவர்கள் யாரென்று கேட்டால் அனைவருமே நம்மை பெற்றெடுத்த தாய்மார்களை தான் கூறுவோம். தாய்மை என்பது பெண்களுக்கே உரிய தனிச்சிறப்பு. மனித குலத்தின் ஆரம்பக் காலக்கட்டத்தில் சமூகத்தை வழிநடத்தியவர்கள் பெண்கள்தான். அந்த பெண்வழி சமூகத்தின் இன்றைய பெண் கடவுளர்கள் தோன்றின. கருவறை முதல் கல்லறை வரை ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கு பின் பெண்ணின் பங்கு உண்டு என்பது உலகறிந்த உண்மை. சமூகத்திலே பல்வேறு வகையான வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டு ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் பெண்கள் என்பது நிதர்சன உண்மை. இவ்வாறு வளர்ச்சிப் பாதையில் சமுதாயத்தை விட்டுச் செல்லும் பெண்கள் பாதுகாப்போடு நடத்தப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் காண்பதோ நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது. சீரும் சிறப்போடும் நடத்தப்பட வேண்டிய பெண்கள், பல்வேறு வகையான வன்முறைக்கு இலக்காகும் கொடுமையான செயலாகும். இவ்வுலகில் ஏற்படும் எவ்வித பிரச்சினையாக இருந்தாலும் அதில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும் குழந்தைகளுமே. பெண்ணின் நிலையை சற்று ஆராய்ந்து பார்த்தால் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது தெரியும். 15 முதல் 45 வயதான பெண்களுள் மூன்றில் ஒரு பங்கினர் ஏதாவது ஒரு வன்முறைக்கு ஆளாகின் றனர். 30% பெண்கள் உடல் ரீதியான, பாலியல் ரீதியான வன்முறையால் பாதிக்கப்படுகிறார்கள். திருமணமான 46 சதவீதம் பேர் பல்வேறு வகையான வன்முறைகளால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பற்ற சூழலில் வாழ்கிறார்கள்.

பெண்கள் கல்வியிலும் பல துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள் என்றும் ஆனால் அத்துறைகளில் உள்ள பெண்கள் பாதுகாப்போடு வருகிறார்களா என்றால் அது கேள்விக்குறியாகத் தான் உள்ளது. நகர்புறங்களில் பல கம்பெனி களிலும் தொழிற்சாலைகளிலும் தொலைக்காட்சி நிறுவனங்களிலும் ஊடகங்களிலும் பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பற்ற பல வகையான பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்கிறார்கள். கிராமப்புறங்களில் வாழும் பெண்கள் பாதுகாப்பின்றி அதிகளவில் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

## பெண்கள் பாதுகாப்பு சட்டம்

பாதுகாப்பின்றி வாழ்க்கை நடத்தும் பெண்களின் வாழ்வில் பாதுகாப்பு கிடைக்குமா என எத்தனையோ பெண்களும், பெண்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட ஆர்வலர் களும் ஆவலோடு எதிர்நோக்கி இருந்தனர். அவர்களின் பல ஆண்டுகள் கனவு நிறைவேறும் வகையில் பெண்கள் பாதுகாப்பு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 14 மற்றும் 15 இரண்டும் எல்லா வகையான வேறுபாடுகளை களைந்து சமத்துவத்துடனும் சகோதரத்துவத்துடன் வாழ்வதற்கான உரிமையை வலியுறுத்தி கூறுகிறது. பிரிவு 21இல் பெண்கள் எவ்வாறு மாண்போடு சமாதான வகையில் பொது இடங்களிலும் பணியிடங்களிலும் மதித்து நடத்தப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது. ஆனால் நடைமுறையில் நாம் காண்பதோ பெண்களின் பாதுகாப்பற்ற நிலை இந்நிலை இந்தியாவில் மிகவும் உயர்ந்துள்ளதை ஐக்கிய நாடுகள் சபை வன்மையாக கண்டித்து பெண்கள் பாதுகாப்பை வலியுறுத்துகிறது.

1993இல் வியன்னாவில் நடந்த உலக மனித உரிமை மாநாட்டில் பெண்களின் உரிமைகளை மீறுதல் மிகக் கொடிய மனித உரிமை மீறல் என்பதை சுட்டிக்காட்டுகிறது. 1903இல் இருந்து இந்திய அரசானது பல நிலைகளில் பெண்கள் பாதுகாப்பிற்கு முயற்சிகளை எடுத்த வண்ணமாக இருக்கிறது. இந்தியாவில் பெண்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு 2010ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதுதான் "பணியிடங்களில் பாலியல் வன்முறைக்கு எதிரான பெண்கள் பாதுகாப்பு சட்டம் 2010". இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் பெண்களுக்கான முழுமையான

பாதுகாப்பினை வழங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் அரசின் நிலை என்ன? பணிபுரியும் பெண்களுக்கு பாதுகாப்பு அளித்துள்ளதால் இச்சட்டம் எல்லா இடங்களிலும் பணி செய்யும் பெண்களுக்கு பொருத்தமாக உள்ளதா? அரசு துறையிலும் தனியார் துறையிலும் வேறு எந்த நிறுவனங்களாக இருந்தாலும் பெண்கள் பாலியல் ரீதியான வன்முறைகளால் பாதிக்கப்பட்டால் இச்சட்டம் மூலம் நீதி பெறலாம்.

இச்சட்டத்திற்கு கீழ்ப்படியாத அதிகாரிகள் தண்டனையும் 50 ஆயிரத்துக்கும் அதிகமான அபராதமும் விதிக்க நேரிடும். பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் செய்தால் 90 நாட்களில் விசாரணையை முடித்து நடவடிக்கை எடுக்க இச்சட்டம் வலியுறுத்துகிறது. இச்சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டியது மத்திய மற்றும் மாநில அரசுகளின் பொறுப்பு. பெண்களின் பாதுகாப்பு கருதி அவர்களின் பணி இடங்களில் தேவையற்ற வன்முறைச் செயல்களை ஒழிக்கும் முயற்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு வழி செய்ய வேண்டும்.

பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறை மீறல்கள் அனைத்தும் மனித உரிமை மீறல்களே. அத்தகைய மனித உரிமை மீறலை செய்யும் நபர் யாராக இருந்தாலும் எந்த வகையில் இருந்தாலும் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். பெண்களின் பாதுகாப்பிற்கு மிகவும் உதவி செய்திடும் வகையில் இச்சட்டம் அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சரியான வகையில் தாமதமின்றி இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் கண்டிப்பாக தொடர்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைச் செயல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம். நாட்டின் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமெனில், வேலை செய்யும் இடங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

**- சி.பரமேஸ்வரி**

## பயிற்சி வகுப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருட்டினகிரி மாவட்ட மையத்தின் சார்பாக 02.10.2020 அன்று சூளகிரியில் சங்க பயிற்சி வகுப்பு நடைபெற்றது. பயிற்சி வகுப்பிற்கு மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் வரவேற்றார்.





"சங்கமாய் வளரும் சாத்திரம் கற்போம்" என்ற தலைப்பில் மாநில பொருளாளர் தோழர் மு.பாஸ்கரன் அவர்கள் பயிற்சி வகுப்பெடுத்தார். முன்னதாக மாவட்ட மையத்தின் சார்பாக 2021ஆம் ஆண்டிற்கான நாட்குறிப்பு முன்பணமாக (காசோலை), ரூ 50,000/-, அரசு ஊழியர் மாத இதழ் சந்தா 75க்கான தொகை ரூ 7,500/-, 2020ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தா 754க்கான தொகை ரூ 15,080/-, புனே பயண கட்டணம் நிதி நிலுவை ரூ1,500/- ஐ மாநில பொருளாளரிடம் வழங்கப்பட்டது.



பயிற்சி வகுப்பில் மாவட்ட பொறுப்பாளரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவருமான தோழர் ஜி.பழனியம்மாள் சிறப்பு அழைப்பாளராகவும், மாவட்ட நிர்வாகிகள், வட்டக் கிளை நிர்வாகிகள், துறைச் சங்க நிர்வாகிகள் என 50 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். மாவட்ட பொருளாளர் தோழர் வி.தேவராஜ் நன்றி கூறி பயிற்சி வகுப்பை நிறைவு செய்தார். ■

## மைடியர் காம்ரேட்ஸ்-13

# நாமெல்லாம் அரசியலுக்குப் போய்விடலாமா?

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப் பட்டது எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் கிடைக்க வேண்டும், சரிநிகர் சமத்துவ சமுதாயம் உருவாக வேண்டும் என்ற நோக்கில்தான். ஓட்டு போட்டு வேட்பாளரை தேர்வு செய்யும் முறையும் மக்கள் ஜனநாயக உரிமையும் அதனடிப்படையில் எழுந்ததுதான். ஆனால் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டதன் உயரிய நோக்கம் நிறைவேறி யிருக்கிறதா என்று பார்த்தால் வேதனைதான் மிஞ்சுகிறது. அரசியல் ஒரு வணிகமாகி விட்டது. பெரும்பாலான அரசியல்வாதிகளின் வாயிலிருந்து வரும் வார்த்தைகளில் உண்மை என்பது ஒற்றைச் சதவீதமாகக்கூட இல்லை. மக்கள் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்ட அமைச்சர் பெருமக்கள் கூட ஜனநாயக மாண்புகளை காக்கத் தவறி தன் சாதி, தன் இனம், தன் மக்கள் என சுயநலம் பார்ப்பதை காண நேர்கையில் இந்த அரசியல் சாசனம் என்பது கதைப்புத்தகமாக ஆகிவிட்டதாகவே தெரிகிறது. கதைப்புத்தகம் என்றால் அதில் கதைகளும் ஜோக்குகளும் இருக்கத் தானே செய்யும். தேர்ந்தெடுத்த மக்கள் பிரதிநிதிகள், பொறுப்பான அரசியல் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள், அதிகார வர்க்கத்தினர், எதிர்கட்சியினர் என்று பலதரப்பினரும் தாங்கள் சார்த்திருக்கும் இயக்கம், கட்சி மற்றும் சுயநலங்களுக்காக எந்த லெவலுக்கும் இறங்கி செய்யும் அளப்பறைகளை அதற்கு சமூக வலைத்தளங்களில் வரும் எதிர்வினைகளைப் பார்த்தால் தலையணை தடிசில் பத்து புத்தகங்கள் போடலாம் போலிருக்கிறது.

3,5,8ம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு அவசியம் என ஒரு கல்வியாளர் மாணவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார். ''பிள்ளைகளின் எதிர்காலத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. அவர்கள்தான் இந்த நாட்டின் எதிர்காலம். உலகம் முழுவதிலும் ஏற்பட் டுள்ள போட்டி சார்ந்த சவால்களுக்கு ஏற்ப இந்திய இளைஞர்களை உருவாக்க வேண்டியே அவர்களை தலைசிறந்தவர்களாக உருவாக்க புதிய கல்விக் கொள்கையில் இந்தத் தேர்வு முறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.'' என்றார். அவர் பேச்சை கேட்ட ஒரு மாணவன் எழுந்தான். ''சார் ஒரு சந்தேகம் கேக்க லாமா?'' என்றான். ''கேளு தம்பி. உன் சந்தேகத்தை போக்கத்தானே நான் வந்திருக்கேன்'' என்றார். ''சார், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்., சயின்டிஸ்ட், டாக்டர், இன்ஜினியர்,'' இவங்க பெரியவங்களா இல்லை ''முதலமைச்சர், பிரதமர், ஜனாதிபதி'' இவங்க பெரியவங்களா?'' என்றான். ''தம்பி டாக்டர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.இ எல்லாம் படிச்சுட்டு வர்றவங்க. ஆனா பிரதமர் முதல்வர் ஜனாதிபதியெல்லாம் மக்கள் ஆதரவுல வர்றவங்க. அதனால அவங்கதான் பெரியவங்க'' என்றார். ''இவ்வளவு பெரிய பொறுப்புல இருக்கறவங்களுக்கு மட்டும் எந்த தேர்வும் கிடையாது, படிப்பும் தேவையில்லைன்னு சொல்றீங் களே அது மட்டும் என்ன நியாயம் சார். அவங்களால எந்தத் தேர்வும் எழுதாம இந்த நாட்டை ஆள முடியும் போது, எங்களால மட்டும் தேர்வு எழுதினாத்தான் முன்னேற முடியும்னு சொல்றது என்ன லாஜிக் சார்?'' என்று கேள்வி கேட்க அரங்கம் அதிர்ந்தது.''தம்பீ நீங்க சொல்றபடி நடக்கணும்னா அரசியல் அமைப்பு சட்டத்தைதான் மாத்தணும்.'' ''போய் முதல்ல அதை மாத்திட்டு வாங்க சார். அப்புறம் நாங்க மாறுறதைப் பத்தி யோசிக்கலாம்.'' மாணவனின் இந்தக் கேள்வி சிரிக்க மட்டுமல்ல சிந்திக்கவும் கூடிய ஒன்று.

இதுபோல யாராவது கேள்வி கேட்டுவிடப் போகிறார்கள் என்றுதான் பிரதமர் மோடி ஊடகவிய லாளர்களை சந்திப்பதில்லை, நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களிலும் அவர் பங்கேற்பதில்லை, பங்கேற் றாலும் விவாதங்களுக்கு பதில் அளிப்பதில்லை. மாறாக யாரும் கேள்வி கேட்க முடியாத மனதின் குரல் நிகழ்ச்சியில் அவ்வப்போது தோன்றி தனக்குத் தோன்றியதை பேசி வருகிறார். தன்னுடைய ஆட்சியில் மாதம் மும்மாரி பொழிவதாகவும் மக்கள் எல்லாம் வசதியுடன் வாழ்வதாகவும் நினைத்துக் கொண்டு அவர் பேசிய ''தகுதியுள்ள அனைவரும் தாமாக முன்வந்து வருமான வரி செலுத்த வேண்டும்'' பேச்சுக்கு ''வருமான வரி கட்டலாம்னுதான் இருக்கோம். ஆனா நீங்கதான் வருமானத்துக்கு ஒரு வழி காட்டணும் பிரதமரே.'' என்ற எதிர்வினை இரக்கமற்ற இந்த பொது முடக்கத்திலும் பலர் முகத்தில் சிரிப்பை வரவழைத்துவிட்டது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பட்டியல் மத்திய மாநில அரசுகளிடம் கிடையாது, கோவிட் காலத்தில் இதுவரை சுகாதாரப் பணியாளர்கள் எத்தனை பேர் இறந்தார்கள் என்ற புள்ளி விபரம் தெரியாது, கொரோனா காலத்தில் வேலை இழந்து விட்ட இளைஞர்கள் உள்ளிட்ட நபர்களின் எண்ணிக்கை விபரம் அரசிடம் கிடையாது. பசியாலும், பட்டினியாலும், கடன் தொல்லையாலும், மழை பொய்த்துப்போனதாலும் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் விபரம் அரசிடம் கிடை யாது, இப்படி முக்கியமான எந்த விபரங்களும்

அரசிடம் கிடையாது. ஆனால் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனும், தான் இந்தியக் குடிமகன் என்பதை நிரூபிக்க 70 ஆண்டுகால ஆவணங்களை மட்டும் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டுமாம். இந்த ரணகளத்திலும் ஆட்சியாளர்களின் செயல் பாடுகள் கவலையை மீறி சிரிக்க வைப்பவையாக உள்ளன.

தோழர் நான் உங்களுக்கு 100 ரூபா கடன் கொடுத்து அதுக்கு 12 ரூபா வட்டி வாங்கினா அதுக்கு பேரு கந்துவட்டி, அதுவே அரசாங்கம் 100 ரூபாய்க்கு 28 ரூபா வரைக்கும் வரி போட்டா அதுக்கு பேரு ஜிஎஸ்டி.

பாரதிய ஜனதா கட்சித் தலைவர் ஜே.பி.நட்டா பிரதமரை வானளாவப் புகழ்கிறார். மோடி கடவுள் போன்றவர் என்று. அடுத்த பிரேமில் நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் பேட்டி கொடுக்கிறார், ''இந்தியாவில் பொருளாதார வீழ்ச்சிக்கு கடவுள்தான் காரணம்.'' என்று. இருவரின் பேச்சுக்கும் முடிச்சு நாம் போடத்தேவையில்லை அதுவாகவோ வந்து சிக்கிக்கொண்டு விட்டது.

புதிய கல்விக் கொள்கை பற்றி முப்படைத் தளபதி பிபின் ராவுத் என்ன கருத்து சொல்கிறார் என்பதை கேட்போம், ''புதிய கல்விக் கொள்கையால், கிராமப்புற மாணவர்கள் எப்படியும் பள்ளிக் கல்வியை தாண்ட மாட்டார்கள், அவர்களுக்கு மதிப்பான வேலையும் கிடைக்காது. அதனால் அவர்களில் ஒரு பகுதியினர் இராணுவப் பணியை நோக்கி வருவார்கள்.'' அதாவது ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல எல்லையில் காவல்காக்கும் தளபதிக்கும் தெரிந்திருக்கிறது புதிய கல்விக் கொள்கையால் ஏழை மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பது. ஆனால் ஊடகங்களில் இவர்கள் பேசும் பேச்சுக்களை பாருங்கள் இதன் நகைமுரண் பட்ட வர்த்தனமாகத் தெரியும்.

திடீரென்று மூத்த குடிமக்களுக்கு ரயில்சலுகை ரத்து என அறிவிப்பு வருகிறது.கொரோனா காலத்தில் அம்பானிக்கும், அதானிக்கும், கார்ப்பரேட் நிறுவனங் களுக்கும் மக்கள் வரிப்பணத்தை சலுகை என்ற பெயரில் வாரி இறைக்கத் தெரிந்த மத்திய அரசுக்கு வயதான பொதுமக்களுக்குப் போகும் இந்தச் சிறிய சலுகை எப்படி கண்ணை உறுத்தியிருக்கிறது பாருங் கள். இதைக்கேட்டால் இங்குள்ள பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் இது மக்களுக்கான அரசு எவ்வளவு நாட்களுக்கு சலுகை கொடுப்பது என்று கூறிச் சிலாகிப்பார்கள்.

நடிகர் சூர்யா நீட் தேர்வு குறித்தும் புதிய கல்விக் கொள்கை குறித்தும் அதனால் தமிழக மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் எனபது பற்றியும் சொல்லிய கருத்துக்கு பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த ஒரு பிரமுகர் ரொம்ப கடுப்பாகி நடிகர் சூர்யாவை யாராவது செருப்பால் அடித்தால் அந்த நபருக்கு நான் ஒரு லட்சம் ரூபாய் பரிசு தருவேன் என்று கூறியது வலைத்தளச் செய்தியாக பரவியது. இதற்கு எதிர் வினை ஆற்றிய நடிகர் சூர்யாவின் கூற்று பதிலடியாக இருந்தது. ''என்னை அடிப்பதால் ஒரு லட்சம் ரூபாய் கிடைக்கும் என்றால் அந்த வாய்ப்பை ஒரு ஏழை மாணவனுக்குத் தரத் தயார்.'' இப்படித் தான் அரசியல்வாதிகள் தாங்கள் சார்ந்திருக்கும் கட்சிக்கும் ஆட்சிக்கும் உள்ள அதிகாரச் செருக்கை அருவெறுப் பாக பயன்படுத்துகிறார்கள்.

இந்திய மக்களில் பெரும்பாலான மக்கள் இன்று வீதிகளில் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உண்ண உணவில்லை, இருக்க வீடில்லை, மருத்துவச் செலவுகளுக்கும் வசதியில்லை. அரசு மருத்துவங்களிலும் இடமில்லை என்கிற ஓலம் இந்தியா முழுவதிலும் ஒலித்துக் கொண்டிருக்க பிரதமர் மோடியோ புதிய நாடாளுமன்றத்தை கட்டியே தீருவேன் என்று அடம்பிடிக்கிறார்.

மத்தியில்தான் அப்படி என்றால் தமிழகத்தில் இந்த நிலை இன்னும் மோசமாக இருக்கிறது. மக்களின் எதிர்ப்பையும் மீறி எட்டுவழிச்சாலை அமைக்கப்படும் என்பதும் அதற்காக சுப்ரீம் கோர்ட் வரை அரசாங்கம் போவதும், விவசாய மசோதாக்களை அதிமுகவின் ஒரு எம்பி மறுத்துப் பேசுவதும், இன்னொரு எம்பி ஆதரித்து பேசுவதும், நீட்டுக்கும், ஜிஎஸ்டிக்கும் லெட்டர் போட்டுட்டேன் என்று முதல்வர் தன் னுடைய பொறுப்பினைத் தட்டிக் கழிப்பதும், மத்திய அரசின் திட்டங்களை அதன் சாதக பாதகங்களை அறிந்தும் அறியாதது போல் தலைமேல் வைத்து அமல்படுத்துவதும் வேடிக்கை கேளிக்கைகளாகத் தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஒரு காலத்தில் இரயிலில் டீ விற்ற சிறுவன் பின்னர் பிரதமராகி ரயிலையே விற்றுவிடுவான் என்று நம்மில் யாராவது கற்பனை செய்து பார்த்திருப்போமா. இன்று அது நடந்திருக்கிறது. எதுக்கு தோழர் நீட்டு, நோட்டு, கோட்டு, சூட்டு எல்லாம். இது எல்லாத்தையும் தூக்கிப் போட்டுட்டு நாம எல்லாரும் அரசியலுக்கு போயிடலாம். அங்கதான் எந்த எக்ஸாமும் கிடையாது, எந்த நடத்தை விதியும் கிடையாது!

**- ஜிஜி**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com